GOKULAM

கோகுலம்

ஜூலை 2005 ❖ ரூ.6/- ❖ 96 பக்கங்கள்

குழந்தைகளின் குதூகலம்!



எதிர்பாராத சந்தோஷம்!

ஹாரி பாட்டர் போஸ்டர்

MILKA

WONDER CAKE



அற்புதமான ஆறு சுவைகளில்

கோகுலம்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்
லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு
சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

முதன்மை உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22251522 / 22250623

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :


ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!



- வாய்க்குள் குதிப்பேன்! - 4
- கவர் ஸ்டோரி - 8
- ரேவதி ஆன்ட்டி டைம்ஸ் - 20
- காதைக் கடித்த தாசப்பா! - 24
- உழைப்பால் உயர்ந்தவர்கள்! - 28
- அண்ணனுக்கு குரு தம்பி! - 33
- 1000/- ரூபாய் பரிசுப் போட்டி - 40
- ஹாரி பாட்டர் - போஸ்டர் - 48
- பாலப் பையன்! - 56
- நகரும் இலை; நடக்கும் குச்சி! - 60
- மர்மப் புத்தகம்! - 68
- அம்மாவைத் தேடி... - 76
- திருடா! திருடா! - 76
- பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்! - 96





ஜூலை 2005 ❖ மலர் : 23 ❖ இதழ் : 6

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்

அன்புள்ள உங்களுக்கு...

வெற்றியின் ரகசியம்!

விடுமுறையில் பொழுது போக டீ.வி. பார்ப்பது, விளையாடுவது, தூங்குவது என வழக்கத்துக்கு மாறாக அதிகமான நேரத்தைச் செலவிட்டு இருப்பீர்கள். பள்ளி திறந்து விட்டது; பொறுப்பும் கூடிவிட்டது. பொழுது போக்கு அம்சங்களைக் குறைத்துக் கொண்டு பள்ளிப் பாடங்களில் கவனம் செலுத்த வேண்டும். பாடங்களைக் கவனிப்பதில் மட்டும் அல்ல, எந்த ஒரு விஷயத்தையும் நாம் கற்றுக் கொள்ள கூர்ந்து கவனித்தல் என்பது மிக மிக முக்கியமான விஷயம். எதையும் சொல்லிக் கொடுக்கும் போதே நன்றாக கவனத்தைச் சிதற விடாமல் உற்று நோக்கினால் சுலபமாக கற்றுக் கொள்ள முடியும்.



வகுப்பில் நடத்தும் பாடத்தை உள்வாங்கிக் கொண்டு, அதை வீட்டிற்கு வந்து உடனே படித்து புரிந்து கொண்டால் மறக்கவே மறக்காது. எந்த ஒரு செயலையும் ஒத்திப் போடுவதால் பிரச்னை அதிகமாகுமே தவிர, குறையவே குறையாது. பாடங்களையும் உடனுக்குடன் படித்து விட்டால் தேர்வுகளைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. இன்றிலிருந்தே இந்த விஷயங்களைக் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

இதைத்தான் நாமக்கல் சத்யா, சுஜனா, அனுஜா போன்ற மாணவ, மாணவியர் தங்கள் வெற்றியின் ரகசியமாக கூறியிருக்கின்றனர். எல்லோருக்கும் திறமை இருக்கிறது. அதை முறைபடுத்திக் கொள்கிறவர்கள் சாதனையாளராக ஜொலிக்கின்றனர். ஏற்கெனவே சாதித்த மாணவ, மாணவியருக்கும் இனி வருங்காலத்தில் சாதிக்க இருக்கும் உங்களுக்கும் வாழ்த்துகள்!

அன்புடன்
தம்பிப்பயல்



அவசர உதவி!

பரிசு ஜோக்ஸ்

''என்ன இது...! வண்டி பிளாட்பாரத்திலே ஏறி நின்னுடுச்சே...?"

"கண்டக்டர்தான் ஆரம்பத்திலேயே வழியிலே பஸ் நிக்காதுன்னு சொன்னாரே!"



''ஏண்டா... படிக்காமே விளையாடப் போறே...?"

''விளையாடறதுக்கெல்லாம் படிப்பு வேண்டாம்மா...!"

- சின்னை எஸ்.வெங்கட்ராமன், திருச்சி



"உங்க ஊரில் 'பெரிய மனிதர்கள்' யாராவது பிறந்து இருக்கிறார்களா?"

"இதுவரை குழந்தைகள்தான் பிறந்திருக்கிறார்கள்!"

- வே.சுபஸ்ரீ, ஏழாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, நல்லூர்

"டாக்டர், எனக்கு அவசரமா இரண்டாயிரம் வேண்டும்!"

"என்கிட்ட ஏன் கேட்கறீங்க?"

"நீங்கதானே 'அவசர உதவி' செய்யப்படும்னு சொன்னீங்க?"

- எம்.ஹரிவிக்னேஷ், பத்தாம் வகுப்பு, அழகிரி சுரேஷ் அரசு உயர்நிலைப் பள்ளி, சிறுமுகை



மா.அழகுராஜன்


"வாய்க்குள் குதிப்பேன்!"

ஓநாய்கள் கூட்டம் கூட்டமாக வசித்து வந்தன. அக் கூட்டத்தில் இருந்த ஒரு சோம்பேறி ஓநாய், 'சிங்கமும் புலியும் வேட்டையாடிக் கொன்று தின்ற மிச்சத்தை தின்னக் கூடாது. இனிமேல் தனியாகச் சென்று வேட்டையாடுவோம்' என்ற முடிவோடு தனியே வேட்டைக்குக் கிளம்பியது.

ஓநாய்க்குத் தனியே சென்று வேட்டையாடிப் பழக்கம்' இல்லாததால் தயக்கத்தோடு ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருந்தது. அப்போது புள்ளிமான் ஒன்று அந்த வழியாக வந்தது.

ஓநாய் அதனிடம் சென்று, "ஏ! புள்ளிமானே, நான் பசியோடு இருக்கிறேன். இப்போது உன்னைக் கொன்று தின்னப் போகிறேன்" என்று கூறியது.

புள்ளிமான், ஓநாயின் முட்டாள் தனத்தை நினைத்து மனதிற்குள் சிரித்துக் கொண்டு,





கதை

''ஓநாயாரே! எங்கள் இனத்தைக் கடவுள் படைத்ததே உங்கள் இனத்தவர் தின்று பசியைப் போக்கிக் கொள்வதற்காகத் தானே! உங்களைப் போல் முன் கூட்டியே சொல்லிவிட்டுத் தின்பவர்களுக்கு உயிரைக் கொடுப்பதில் எனக்கு முழு சம்மதம்'' என்று நயந்து பேசியது.

அதன் பிறகு, ''இதோ பாருங்கள், என் பின்னங்காலில் முள் ஒன்று குத்தி இருக்கிறது. முதலில் முள்ளை எடுத்துவிட்டு என்னைத் தின்று பசியாருங்கள். இல்லையென்றால் முள் உங்கள் தொண்டையில் மாட்டிக் கொண்டு உங்கள் உயிருக்கே ஆபத்தாகி விடும்'' என்று சொன்னது புள்ளிமான்.

புள்ளிமான் சொன்னதை நம்பிய ஓநாய், அதன் பின்னங்கால் அருகே சென்றது. இதுதான்

சமயம் என நினைத்த புள்ளி மான் தன் பின்னங்கால்களால் பலங் கொண்ட மட்டும் ஓங்கி ஓநாயை உதைத்தது. ஓநாய் குட்டிக்கரணம் போட்டு சற்று தூரத்தில் போய் விழுந்தது. புள்ளிமான் சிறிதும் தாமதிக் காமல் காட்டுக்குள் ஓடி மறைந்தது.

வலி தாங்காமல் முனங்கிக் கொண்டே எழுந்த ஓநாய் மலைப்பாதை வழியே சென்றது. அங்கே உயரமான பாறை மீது ஆடு நின்று கொண்டிருப் பதைப் பார்த்தது.

''ஏ! ஆடே, கீழே இறங்கி வா. உன்னைத் தின்று என் பசியைப் போக்கிக் கொள் கிறேன்'' என பாறைக்கு நேராய் கீழே நின்றபடி சொன்னது.



இதைக் கேட்ட ஆடு, 'இந்த ஓநாய்க்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ' என எண் ணியபடி, ''ஓநாயாரே, உன் இனத்தவர் ஒருவரையும் காணோம். நீர் மட்டும்தான் என் னைச் சாப்பிடப் போகிறீரா?'' எனக் கேட்டது.

''ஆமாம்... எனக்குப் பசிக் கிறது. சீக்கிரம் கீழே வா...'' என்றது ஓநாய்.

''அது சரி, நீர் என்னைச் சாப்பிடத் தொடங்கியதும் உம் இனத்தவரெல்லாம் மோப்பம் பிடித்துக் கொண்டு ஒன்று கூடி வந்து விடுவார்கள். பிறகு என்னை உம் பசியாற சாப்பிட முடியாது. அதனால் உம் வாயை நன்றாகத் திறந்து கொண்டு நில். நான் இங்கிருந்தபடியே நேராக உம் வாயில் குதித்து விடுகிறேன். என்னை அப்படியே விழுங்கிப் பசியாறிக் கொள் ளும்'' என்றது ஆடு.

''நீ சொல்வது சரிதான்...'' என்று சொன்ன ஓநாய் கீழே இருந்தபடியே 'ஆ'வென்று வாயைத் திறந்து கொண்டு நிற்க, பாறையில் இருந்து ஆடு ஓநாயின் தலையைப் பார்த்துத் தாவியது.

ஆட்டின் தலை ஓநாயின் உடம்பில் வேகமாய் வந்து மோத, ஓநாய் தரையோடு விழுந்து வலி தாங்க முடியா மல் தப்பித்தோம், பிழைத் தோம் என்று எழுந்து ஓடத் தொடங்கியது. ●


வண்ணம்
தீட்டுங்கள்!



கோபாலபுரத்திலுள்ள அந்த வீட்டைக் கடந்து செல்பவர்கள் அண்ணாந்து பார்த்தபடியே செல்கிறார்கள். இதற்குப் பொருத்தமாய் அந்த வீட்டினுள்ளே மகிழ்ச்சி கரை புரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் வெளியான +2 தேர்வு முடிவுகளில் 1190 மதிப்பெண்கள் எடுத்த சுஜனாவும் நான்கு பாடங்களில் 200க்கு 200 எடுத்து 1186 எடுத்த அனுஜாவும்தான் அந்த இல்லத்தை மின்ன வைத்த வைரங்கள்!

இரட்டைச் சகோதரிகளான இவ்விருவரும் நம்மிடம் தங்கள் வெற்றி எப்படி சாத்தியமானது என்பதைத் தெளிவுபடுத்தினார்

எதிர்பாராத



சாதனை சத்யா!

சமீபகாலமாக நாமக்கல் வரும் வி.ஐ.பி.கள் பலரும் இவர் படித்த பள்ளிக்கு வந்து சத்யாவுக்கு வாழ்த்து தெரிவிக்கிறார்கள். சந்தோஷத்தில் பறக்கிறார் சத்யா.

தமிழை முதல் பாடமாக எடுத்ததினால் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த சத்யா 1200க்கு 1186 மதிப்பெண் எடுத்து அதிகார பூர்வமாக +2 தேர்வில் முதலிடத்தை தட்டியிருக்கிறார். பதினோராவது படித்த அப்பா, ஐந்தாவது வரைக்குமே படிக்க முடிந்த அம்மா என்று விவசாயக் குடும்பத்தில் பிறந்த சத்யாவின் இச்சாதனை மற்ற மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. "தமிழ் பாடத்துல மட்டும் மாநில அளவில் ரேங்க் வாங்குவேன்னு நினைச்சேன். இந்தச் சாதனை நான் எதிர்பாராதது" என்று

கள். முதலில் நம்மிடம் பேசியவர் சுஜனா :

''ரிசல்ட் வந்த அன்னைக்கு கூட நானும் அனுஜாவும் பேசிட்டு இருந்தோம். எப்படியும் ராசிபுரம், ஈரோட்டைச் சேர்ந்தவங்கதான் ஸ்டேட் ரேங்க் எடுக்கப்போறாங்க. நமக்கெல்லாம் சான்ஸே இல்லைன்னு கூலா இருந்தோம். அப்பாவும் வழக்கம் போல வேலைக்குப் போயிட்டார்.

''மணி காலை ஒன்பதாச்சு. எனக்கு லேசா டென்ஷன். சரி ஒரு வாக் போய் மனதை திடப் படுத்துவோம்னு நான் ரோட்ல நடந்திட்டிருக்கும்போது அனுஜா ஓடிவந்து விஷயத்தைச் சொன்னப்போ ஒரு நிமிடம் நான் ஆடிப் போயிட்டேன்.

''+2க்குள்ள நுழையும்போதே நான் மாநிலத்தின் முதல மாணவியா தேர்ச்சி பெறணும்னு எல்லாம் சபதம் எடுக்கவேயில்லை! நான் கம்ப்யூட்டர் சயின்ஸ் க்ரூப் எடுத்ததால அதிலயும் கணிதம், இயற்பியல், வேதியியல் போன்ற பாடங்களில் மட்டும் நிறைய மார்க் எடுத்து சுலபமா இன்ஜினியரிங் சீட் வாங்கத்தான் முடிவெடுத்திருந்தேன்.

''அதுவுமில்லாம எங்க டி.ஏ.வி. பள்ளியில ஸ்டேட் ரேங்க் வாங்கக் கூடிய தகுதியான லிஸ்ட்ல பதினைந்து பேர் இருந்தாங்க.

சந்தோஷம்!



மகிழ்ச்சி பொங்க பேசும் சத்யா அடுத்ததாக மருத்துவம் படிக்கவுள்ளார்.

''தமிழில் 196 மதிப்பெண்கள் எடுப்பது மிகவும் கடினம். சத்யாவின் உழைப்பு உண்மையிலேயே மெச்சக் கூடியது'' என்கிறார்கள் சுஜனாவும் அனுஜாவும்.

படம் :
திருநாவுக்கரசு

நான் அதுல முதல் வரிசையில கூட இல்லைங்கிறது ஆச்சர்ய மான விஷயம்!'' என்று கண்கள் பனிக்கப் பேசினார் சுஜனா.

அவராருகிலிருந்த அனுஜா. ''நானும் அவளும் ஒண்ணா சேர்ந்து படிக்கவே மாட்டோம். அவ விடியற்காலையில எழுந்து படிப்பாள். நான் விடிய விடிய கண் முழிச்சுப் படிப்பேன்.

''நான் பயாலாஜி குரூப் எடுத்ததால அதுல மட்டும் கவனமா படிச்சு மருத்துவ படிப்புல நுழைய முடிவெடுத்திருந் தேன். அதுவுமில்லாம எப்பவும் எங்க டீச்சர்ஸ் சொல்வாங்க, 195 மார்க் வரைக்கும்தான் உங்க உழைப்பு பலனளிக்கும். அதுக்கு மேல கிடைக்கிற ஒவ்வொரு மார்க்கும் கடவுளோட கருணை யில்தான் கிடைக்கும் என்பார்கள். நான் இவ்வளவு மார்க்கெல்லாம் எதிர்பார்க்கலை. நான் 1140க்கும் சுஜனா 1170க்கும்தான் குறி வைத்தோம். ஆனா எங்க சாத னைக்காக நிறைய சுகங்களை இழந்திருக்கோம். கடந்த ஒரு வருஷமா டீ.வி. சீரியல், சினிமா எதுவும் பார்க்கலை'' என்றார்.

ஏன் இருவரும் தமிழ் படிக் கலை?

சுஜனா : நாங்க ரெண்டு பேரும் பத்தாவது சி.பி.எஸ்.ஈ.யில தமிழ்தான் படிச்சோம். இன்ஜினிய ரிங் சேரும்போது மொழிப் பாடத்தின் மதிப்பெண்களைக் கணக்கிட மாட்டாங்க. அதனால படிக்க சுலபமா இருக்கேன்னு சமஸ்கிருதம் எடுத்தேன். அதுல 198 எடுத்து மாநில ரேங்க் வாங்கினேன். தமிழ் எடுக்காத தால தமிழ்நாடு அரசின் ரேங்குல இடம் பெறாதது வருத்தம்தான்.

அனுஜா : எனக்கும் அதே பதில்தான்.

உங்க வெற்றிக்கு மிக முக்கிய காரணம்?

சுஜனா : எங்க ஆசிரியர்கள் தான். போன மே மாதத்திலேயே பாடங்கள் ஆரம்பித்து நவம்பருக் குள்ளே போர்ஷனெல்லாம் முடிச்சுட்டாங்க.

அனுஜா : முந்தைய வருட கேள்வித்தாள்களையே எங்களுக் குத் தராம ஒவ்வொரு தேர்வுக்கும் புதிதான கேள்விகளோடு எங் களுக்கு சமமா அவங்களும் உழைச்சாங்க. அவங்க உழைப்



இவரது தொழிற்குடும்பம் துணி உற்பத்தி, ரசாயனம், உரம், தேனீர், நீர்மின்சக்தி, தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் தடம் பதித்துள்ளது.

புக்கு பலனாத்தான் இன்னைக்கு எங்க ஸ்கூல்ல ஆறு பேர் நான்கு பாடங்களில் 200க்கு 200 வாங்கியிருக்கோம்.

ஆண் மாணவர்கள் இந்த முறையும் அவ்வளவாக சோபிக்க வில்லையே?

இருவரும் : பெண்களிடம் உள்ள ஒரு அக்கறை, உழைப்பு ஆண் மாணவர்களிடம் அந்தள வுக்கு இருக்கிறதில்லை. தேர்வு சமயங்கள்ல கிரிக்கெட், சினி மான்னு தங்கள் கவனத்தை சிதற விடறாங்க.

இறுதித் தேர்வுக்கு எப்படி தயாரானீர்கள்?

சுஜனா : எங்க பள்ளியில் தினமும் காயத்ரி மந்திரம் சொல் வோம். தேர்வுக்கு அரை மணி நேரம் முன்னாடி படித்ததெல்லாம் ஒருமுறை ஞாபகப்படுத்திக்குங் கன்னு தேர்வு கண்காணிப் பாளர்கள் சொல்வாங்க. ஆனா அதுக்குப் பதிலாக அந்த அரை மணி நேரமும் நான் மந்திரங் களை ஜெபிச்சிட்டிருந்தேன்.

அனுஜா : தேர்வு சமயங் களில் குறைந்தபட்சம் ஆறு அல் லது ஏழு மணி நேரமாவது தூங் கணும். அதுதான் வருடம் முழுவ தும் பாடங்களைப் படிக் கிறோமே. அது போதாதா? அப்புறம் தேர்வு சமயங்களில் நண்பர்களின் தொலைபேசி அழைப்புகளைத் தவிர்த்து விடணும். 'நான் அது படிச்சுட்டேன். இது முடிச்சுட் டேன்'னு நமக்குள் பயத்தை ஏற் படுத்தி விடுவார்கள். நம் முதல் எதிரி யான பயத்தை போக்கிட முயற் சிக்கணும்.

அடுத்ததாக என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்?



''உங்க சர்வரை கொஞ்சம் கண்டிச்சு வைங்க!''
''ஏன் ஸார்?''
''என்ன இருக்குன்னு கேட்ட துக்கு ஐந்து கிலோ அரிசி, இரண்டு கிலோ உளுந்து ஊற வெச்சு ரெடியா இருக்குங்கிறார்!''
- டி. அருண்குமார், பத்தாம் வகுப்பு, அழகிரி சுரேஷ் அரசு உயர்நிலைப்பள்ளி, ஆலங்கொம்பு

சுஜனா : நம்ம நாட்டிலே வித விதமா சாடிலைட்கள் தயாரிக் கிறாங்க. இந்தத் துறையில் நுழைந்து நாட்டுக்கு ஏதாவது என் பங்களிப்பை அளிக்க ஆசையாயிருக்கு.

அனுஜா : மருத்துவ துறை அல்லது பயோ டெக்னாலஜி படிப்பேன். நோய்களுக்கான புதிய மருந்துகள் கண்டுபிடித்து நோயற்ற வாழ்வை நாட்டு மக் களுக்கு அளிக்கணும்.


தமிழை முதல் பாடமாக எடுத்து மாநிலத்தில் முதலாவ தாக வந்த நாமக்கல் சத்யா, சமஸ்கிருதத்தை எடுத்ததால் வாய்ப்பை இழந்த சுஜனா மற் றும் சாதித்த கண்மணிகள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

- ச.ந. கண்ணன்

அட்டை, படங்கள் : **ஸ்ரீஹரி**

யாருக்குப் பதவி?

கதை : பி.கார்த்திக் ராமசாமி, சென்னை   படம் : பிள்ளை




அடுத்த நாள்-
நான் உன்னைத் தேர்ந்தெடுக்காமல் அவரைத் தேர்ந் தெடுத்தால் என்ன நினைப்பே?
உங்களிடம் வேலை செய்ய எனக்கு அதிர்ஷ்டம் இல்லை என்று...
நான் இன்னொருவரை வேலைக்குச் சேர்த்தால் நீ என்ன நினைப்பே?
என்னுடைய அறி வின் மூலம் தாங் களும் நம் நாடும் பல னடையாமல் போகும் என்று வருத்தமாக இருக்கும்.
இரண்டு பேருக் கும் சம தகுதி இருந்தாலும் இவருடைய ஆக்கப்பூர்வ மான பதிலுக்காக இவரைத் தேர்வு செய்துள்ளேன்!

மாஸ்டர்

11 பேர் விளையாடும் சுவாரஸ்யமான, அறிவுபூர்வமான விளையாட்டு இது. 10 வயதிற்கு மேல் கலந்து கொள்ளலாம். 11 பேரில் ஒரு பையன், இந்தியாவில் அல்லது உலகத்தில் புகழ்



வாய்ந்த, முக்கியத்துவம் உள்ள ஒருவரை அல்லது சின்னத்தை அல்லது ஊரை மனதில் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு பேப்பரில், தேர்ந்தெடுத்த பெயரை எழுதி, அந்த நபரே அதைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். வேறு யாருக்கும் அந்தக் குறிப்பு தெரியக் கூடாது. இது முக்கியம். ஆனால், குறிப்பு வைத்து இருக்கும் அந்தப் பையன், மற்றவர்களுக்கு நபரா, இடமா என்று மட்டும் சொல்லிவிட வேண்டும்.

மீதியுள்ள 10 பேரும் ஒவ்வொருவரும் ஒரு கேள்வியாகக் கேட்டு 10 நபரும் 10 கேள்விகள் கேட்கலாம். விளையாடுபவர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருந்தால் இரண்டு கேள்விகள் கேட்கலாம். 10 கேள்விகள் முடிவடையும் முன்பே, விடை தெரிந்தவர்கள் உடனே சொல்லிவிடலாம். சரியான விடையைச் சொன்னால் அந்த நபரே மாஸ்டர். தவறாக இருந்தால் ஆட்டத்தில் இருந்து விலக்கப்பட வேண்டும். எழுதி வைத்து இருக்கும் குறிப்பை அந்தச் சமயத்தில் காட்ட வேண்டும். கேள்வி கேட்கப்படும் பொழுது, குறிப்பு வைத்து இருக்கும் நபர், ஆம் அல்லது இல்லை என்று ஒரு வார்த்தையில் தான் பதில் சொல்ல வேண்டும்.

விளையாடும் முறை

உதாரணமாக, அந்த நபர் இந்திரா காந்தியைத் தேர்வு செய்து இருந்தால் மறைவாக அதை எழுதி தன்னிடம் வைத்துக் கொண்டு மற்றவர்களிடம் பிரபலமானவர் என்று சொல்லி விளையாட்டை

ஆரம்பிக்கவேண்டும்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டு, கண்டுபிடிக்கும் முறை : கேள்விகள் தொடங்கலாமா?

1. அவர் பெண்ணா? - **ஆம்**

2. வெளிநாடா?- **இல்லை**

3. உயிருடன் இருக்கிறாரா? - **இல்லை**

4. பரம்பரை குடும்பமா? - **ஆம்**

பதில் சொன்னவருக்கு மாஸ்டர் பட்டம் கொடுத்து விடலாம். குறிப்பு எழுதி வைப்பதால் மாற்றிச் சொல்ல முடியாது. இது சுவாரசியத்துடன், பொழுது போக்காகவும் இருக்கும்.

- கல்கி ராணி ராம்தாஸ்

பட்டம் யாருக்கு?

5. அரசியலில் உள்ளவரா? - **ஆம்**

6. துணிச்சல் மிக்கவரா? - **ஆம்**

7. கொலை செய்யப்பட்டாரா? - **ஆம்**

8. பிரதமராக இருந்தாரா? - **ஆம்**

9. அவருக்கு குழந்தைகள் கிடையாது. - **இல்லை**

10. இறந்தவரின் வாரிசு அரசியலில் இருந்தாரா? -**ஆம்**

பதில் :


இந்திரா காந்தி





வரி இல்லாத வரிக் குதிரை!

ஆழி—




கிரேவி



கிராண்ட்

வரிக்குதிரைகள் ஆப்பிரிக்காவில்தான் அதிகம். வரிக்குதிரைகளில் இரண்டு இனங்கள் இருக்கின்றன. 1. கிரேவி வரிக்குதிரை, 2. கிராண்ட் வரிக்குதிரை. இரண்டுக்கும் வரிகளில்தான் வேறுபாடு இருக்கும். அதாவது, கிரேவி வரிக் குதிரைக்கு வரிகள் மெல்லியதாகவும், கிராண்ட் வரிக்குதிரைக்கு வரிகள் பட்டையாகவும் இருக்கும்.



ஒரு வரிக்குதிரையின் உடலில் இருக்கும் வரிகள், மனிதனின் கைரேகைகளைப் போல், தனித்தன்மை கொண்டவை. எந்த இரண்டு வரிக்குதிரைகளுக்கும் ஒன்று போல் வரிகள் அமைந்திருக்காது!

வரிக்குதிரைகள் மேயும்போது, எல்லாம் ஒரே திசையில் திரும்பியபடி இருக்கும். ஆனால், அவற்றில் ஒன்று மட்டும் எதிர்த்திசையில் திரும்பி, பின்பக்கமாக ஏதாவது ஆபத்து வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கும்!






காட்டில், தனியாக ஒரு வரிக்குதிரை மட்டும் மேயவேண்டியிருந்தால், அது தனக்குத் துணையாக 'காங்கோனிஸ்' என்னும் மானைச் சேர்த்துக்கொள்ளும். வரிக்குதிரை ஓய்வெடுக்கும்போது, அந்த மான் நின்றபடியே சுற்றுமுற்றும் கவனித்துக் கொண்டிருக்கும்! ஆபத்து வரும்போல் தெரிந்தால், எச்சரிக்கை செய்து வரிக் குதிரையை எழுப்பிவிடும்!

வரிக்குதிரைகள் மிகவும் பிடிவாதமான விலங்குகள். ஆனால் எப்படியோ இவற்றைச் சரிக் கட்டி, இந்தியாவில் 'மேவாரின்' சில பகுதிகளில் வண்டிகளில் பூட்டி ஓட்டுகிறார்கள்!



வரிக்குதிரையின் வரிகள் வெள்ளை உடலில் கறுப்பு வரிகளா, கறுப்பு உடலில் வெள்ளை வரிகளா? அது இன்னும் தீர்மானம் செய்யப்படாத விஷயம்!





வரிக்குதிரைகள் என்றால் வரிகள் இருக்கும் அல்லவா? ஆனால், மிக அரிதாக வரிகளே இல்லாத வரிக்குதிரையும் பிறப்பது உண்டு! இதற்கு 'அல்பினோ' பிறப்பு என்பார்கள்!

வரிக்குதிரையின் உடலில் ஒரு பக்கம் இருக்கிற வரிகள், அதே அமைப்பில், சிறிதும் மாறாமல் அப்படியே மறுபக்கமும் இருக்கும்!



மேலை நாடுகளில், வரிக்குதிரைகளை வைத்து நடத்தப்படும் சர்க்கஸ்களை மிகவும் ரசிக்கிறார்கள். ஏனென்றால் வரிக்குதிரைகளைப் பழக்குவது மிகவும் சிரமம்!

வரிக் குதிரைகள் தெரியும். ஆனால், வரிக் கழுதைகளும் இருக்கின்றன! எப்படி? வரிக் குதிரைக்கும் சாதாரணக் கழுதைக்கும் பிறந்தது வரிக் கழுதை! கால்களில் மட்டும் வரிவரியாக இருக்கும். தலை கழுதைத் தலையாக இருக்கும். இஸ்ரேல் நாட்டில், ஜெருசலம் மிருகக் காட்சி சாலையில் இந்த வரிக் கழுதை இருக்கிறது. உலகில் இது போல் 5 வரிக் கழுதைகள்தாம் இருக்கின்றன!



அன்புக் குழந்தைகளே!


வெயில் எப்படி இருந்தது? வியர்வை, புழுக்கம், எரிச்சல் அப்படித்தானே? அந்த அனுபவம் ஏற்படும்போதுதான் மாலையில் வீசும் இளம் காற்றும் அதன் சுகமும் இன்னும் அதிகமான அனுபவமாகப் புரியும்.

பருவ காலம் மாறுவது போலவே சிந்தனைகளும் மாறுகின்றன. எப்படி என்றால் அன்றைய சிந்தனைக்கேற்ப விடுகதைகள் போட்டு மகிழ்ந்தனர் நமக்கு முந்தைய தலைமுறையினர். இன்றும் புதிர், விடுகதை தரும் புதுமைக்குப் பஞ்சமில்லை. இன்றைய தலைமுறைக்குப் புரியும் வகையில் தரும் புதிர்களை அவிழ்க்க முடிகிறதா பாருங்கள். இப்போது நீங்கள் உபயோகிக்கும் புதுமையான கருவிகள், இயந்திரங்களை வைத்துப் புதிர் உருவாக்க உங்களால் முடியும்! நீங்களும் எழுதி அனுப்பலாம்.

1. வெளிச்சம் தாத்தான் அழுவான்; வெளிச்சம் தீர்த்தான் மறைவான் - அவன் யார்?

2. ஒலி கொடுத்து அழைத்திடுவான்; ஓராயிரம் விஷயம் காட்டுவான் - அது என்ன?

3. உரைக்கும் வரை ஒலிப்பதிலே; உரைத்த பின்பு மௌனத்திலே!



4. உழைப்பதிலே ஜோடி; சுமப்பதிலே ஜோடி; வீழ்ந்தாலும் வாடி; ஓய்வார்கள் கூடி - அது என்ன?

5. இருட்டில் வெளிச்சம்; எத்தனையோ கூட்டம்; ஆட்டத்தோடு பாட்டம்; ஆட்டம் முடிந்தால் ஓட்டம் - அது என்ன?

6. கோடையில் சுற்றோ சுற்று; குளிரிலே ஒரே முடக்கு - அது என்ன?

7. கோடை விடுமுறையில் குடம் குடமாகத் தேவைப்படும் - உப்பாக, புளிப்பாக, இனிப்பாக - அவை என்ன?



ஆட்டம் முடிந்தால் ஓட்டம்!

விடைகள் :

1. மெழுகுவர்த்தி 2. செல்ஃபோனில் எஸ்.எம்.எஸ் 3. டெலிபோன் 4. செருப்பு ஜோடி 5. சினிமா 6. மின் விசிறி 7. நீர்மோர், எலுமிச்சை ஜூஸ், பானகம்



வார்த்தை விளையாட்டு

சமீபத்தில் நான் என் அம்மாவுடன், அம்மாவுடைய தோழி வீட்டிற்குச் சென்றேன். அங்கே நாங்கள் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். பிறகு நானும் அந்த ஆன்ட்டியும் செஸ் விளையாடினோம். அப்போது என்னுடைய அம்மாவும் ஆன்ட்டியின் பையனும் சும்மா உட்கார்ந்திருக்காமல் Crocodile puzzle விளையாடினார்கள். அதாவது முதலில் என் அம்மா God என்ற வார்த்தையைச் சொன்னால் அந்தப் பையன் dance என்று சொல்லுவான். என் அம்மா enable என்று சொல்வார்கள். இப்படி ஒருவர் சொன்ன வார்த்தை எந்த எழுத்தில் முடிகிறதோ, அதை ஆரம்பமாகக் கொண்டு இன்னொருவர் சொல்ல வேண்டும். சரியாகச் சொல்பவர்களுக்குப் பாயிண்டுகள் வைத்துக் கொள்ளலாம். இதனால் நாம் ஆங்கிலத்தில் நிறைய வார்த்தைகளைக் கற்றுக் கொள்ள முடியும்.

- ஆர். அம்பிகா,
மதுரை

கால் - கை கடி!

ஆறாம் வகுப்பு படித்தபோது புதிதாகச் சேர்ந்திருந்த மாணவன் ஒருவன் புதுச் செருப்பு கடித்து கால்களில் ரத்தம் வழிய வந்திருந்தான். அதைக் கவனித்த ஆசிரியர் "ஏண்டா, பணம் அதிகம் கொடுத்து நல்ல செருப்பு வாங்கியிருக்கலாமில்ல?" என்று கேட்டார்.



அதற்கு அவன் "பணம் கொறஞ்சதால என் காலைத்தான் கடிக்குது. பணம் அதிகமானால் எங்க



அப்பா 'கையை'யில்ல கடிச்சிருக்கும். பாவம் எங்க அப்பா என்னைப் படிக்க வைக்கவே ரொம்ப சிரமப்படுறாரு'' என்றான்.

- ப. காளிதாசன்,
நீர்விளங்குளம்



காகங்கள்!

காகத்தின் நேயம்!

தினமும் காகங்களுக்குச் சோறு வைக்கச் சொல்வார் என் அம்மா. இது தினசரி தவறாமல் நடக்கும் நடைமுறை. இப்பொழுது விடுமுறை விட்டபடியால் என் அம்மா மாமா வீட்டிற்கு என்னை அனுப்பி விட்டார். சரியாக நான் சோறு வைக்கும் நேரம் காக்கைகள் குரல்கள் ஒலித்தும் சோறு காகங்களுக்கு வைக்காமல் விட்டு விட்டார் அம்மா.



நான் வீட்டிற்கு வரும் பொழுது பத்து காகங்கள் என் முன்னால் தாழ்வாகப் பறந்து கொண்டு காது செவிடுபட 'காகா' என கத்திக் கொண்டே வந்தன.

வீட்டிற்குள் வந்தவுடன் அம்மாவிடம் ''காகங்கள் என்னைத் துரத்திக் கொண்டே வருகின்றன'' என்றேன்.

''அடடே! நீ இல்லாமல் நான் அவற்றுக்கு சாதம் வைக்க மறந்து விட்டேன்'' என்று கூறி சாதம் கொடுக்க, நான் மூன்றாம் மாடி போவதற்குள் அனைத்தும் ஒன்றுகூடி சாதம் வைக்கும் இடத்தில் காத்திருந்தன. சாப்பிட்டதுமல்லாமல் இதுவரை இல்லாமல் என் அருகில் வந்து உட்கார்ந்தன!

- ம. மணிகண்டன்,
எட்டாம் வகுப்பு,
ஆவிச்சி மேல்
நிலைப்பள்ளி,
சென்னை

மாலதி

காதைக் கடித்த

தகடூரை ஆண்டு வந்த அரசன் தர்மதத்தன். அவனுக்குக் கையாளாக தாசப்பா இருந்து வந்தான். அரசர் குறிப்பறிந்து செயல் முடித்தான். எந்த நேரத்தில் யாருக்கு எது வேண்டுமானாலும் தாசப்பா தான்!

ஒருநாள் அரசர் மகிழ்ச்சியாயிருக்கும்போது ''தாசப்பா! உனக்கு ஏதாவது ஆசை இருந்தால் சொல். நிறைவேற்றி வைக்கிறேன்'' என்றான்.

தாசப்பா வாய் கொள்ளாத சிரிப்புடன், ''ஒரு நாளாவது தாசில்தாராயிருக்க வேணும் என்கிறது என்னோட ஆசை'' என்றான்.

''பூ, இவ்வளவு தானா! மந்திரி குணசீலரை அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டான் தர்மதத்தன்.

குணசீலர் வந்தார். ''எந்த ஊரிலாவது தாசில்தார் வேலை காலியாக இருக்கிறதா?'' என்று கேட்டார் மன்னர்.



தாசப்பா!

கதை



"உப்பணாங்குடி தாசில் வேலை நிரப்பப்படாமலிருக்கிறது" என்று தகவல் சொன்னார் அமைச்சர். "தாசப்பாவுக்கு அந்த வேலையை நியமனம் பண்ணி மடல் தயாரித்து வாருங்கள். அதில் நான் கையெழுத்திடுகிறேன்" என உத்தரவிட்டார் அரசர்.

சற்று நேரத்தில் நியமனப் பத்திரம் வந்தது. அதில் கையொப்பமிட்டு தாசப்பாவிடம் கொடுத்த தர்மதத்தர்,

"தாசப்பா! நீ சுறுசுறுப்பானவன். ஆனாலும் சில புத்திமதிகளைச் சொல்கிறேன். உனக்கு அந்த வேலை மனதுக்குத் திருப்தியைத் தரவில்லை என்றால் எப்போது வேண்டுமானாலும் திரும்பி வந்து விடு. இந்த மாதிரி அதிகாரத்திலிருப்பவர் முகத்தைக் கறுப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் தலையில் மிளகாய் அரைத்து விடுவார்கள்.

"கீழே வேலை பார்ப்பவர்களோடு காதைக் கடித்துப் பேச வேண்டும். இல்லையேல் அரசாங்க விஷயங்கள் அம்பலமாகி விடும். மூன்றாவதாக எல்லோர் குடுமியும் உன் கையில் இருக்க

வேண்டும். அப்போதுதான் கம்பீரத்தை நிலை நிறுத்த முடியும்'' என்று புத்தி சொல்லி அனுப்பினார்.

உப்பணாங்குடியில் அரசரிடமிருந்து தகவல் வந்தவுடன் புது தாசில்தாரை வரவேற்க ஊர் எல்லையில் அதிகாரிகள் காத்திருந்தனர்.

பட்டு அங்கவஸ்திரம், தலைப்பாகை ஆகியவற்றோடு புறப்பட்டார் தாசப்பா. வாய்க்கால் கரையோரம் அவரைக் கொடியைக் கண்டதும் அவரைக் காய் பறிக்கத் தொடங்கினாள் அவரது மனைவி. தாசப்பா அருகிலிருந்த முருங்கை மரத்திலேறி காய்களைப் பறித்துப் போட்டார்.



''ரத சப்தமி வருகிறதே! கொஞ்சம் எருக்கிலையும் பறித்துக் கொள்வோம். போகிற ஊரில் எப்படியோ?'' என்றாள் தாசப்பாவின் துணைவி.

''நமக்கு இந்த தாசில் வேலைக்கு அருள்புரிஞ்ச தெய்வத்தை பூஜை பண்ண உபயோகமாயிருக்கும். இந்தக் குளத்துலே தாமரையாப் பூத்துக் கிடக்கே! கொஞ்சம் பறிச்சுக் கோங்கோ.'' என்றாள்.

இப்படி ஏகப்பட்ட 'தேவை'களோடு, வேஷ்டியெல்லாம் அழுக்காக, களைப்போடு வந்த தாசப்பாவிடம் அதிகாரிகள், ''எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டனர்.

''தகடூரிலிருந்து'' என்று கடுப்பாக பதில் சொன்னான் தாசப்பா.

''வரும் வழியில் புது தாசில்தாரைப் பார்த்தீர்களா?'' என்று அவர்கள் மடக்க,

''ஏன் என்னைப் பார்த்தால் தாசில் வேலைக்கு லாயக்கில்லாதவன் மாதிரி இருக்கிறதா?'' என்று முறைத்த தாசப்பா, மடியிலிருந்த அரசனின் உத்தரவை நீட்டினான்.

அதைப் படித்தவர்கள் 'இவரா தாசில்தார்? ஓ, நம்மை சோதிக்க இப்படி வேஷமிட்டிருக்கிறார் போலும்' என்றெண்ணியபடி மேள தாளத்துடன் வரவேற்றனர்.

சிரஸ்தார் வீட்டில் அற்புதமான விருந்து. திருப்தியாக சாப்பிட்டுத் தூங்கி எழுந்தான் தாசப்பா. முகத்தைக் கழுவும் போது அரசரின் எச்சரிக்கை

ஞாபகம் வந்தது.

அடுப்புக்கரியைப் பொடித்து விளக்கெண்ணையில் குழைத்து முகத்தில் பூசிக் கொண்டான்.

கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தபோது அவனுக்கே பயமாக இருந்தது. மாட்டு வண்டியில் ஏறி உட்கார்ந்து அலுவலகம் சென்றான்.

அவனைப் பார்த்ததும் அதிகாரிகள் மிரண்டனர். 'ஏன்?' என்று கேட்க எல்லோருக்கும் பயம்.

சிரஸ்தார் கையெழுத்து தாட்களுடன் தாசப்பாவை நெருங்க, சிரஸ்தாரின் காதினைப் பாய்ந்து கடித்து ''ஜனங்களெல்லாம் வசதியோடிருக்கிறார்களா?'' என்று கேட்க, சிரஸ்தார் காதிலிருந்து ரத்தம் சொட்ட தகரூருக்கே ஓடிவிட்டார் அரசனிடம் நியாயம் கேட்க.

மற்ற அதிகாரிகள் தாசப்பாவை நெருங்கவே பயந்தனர்.

மதியம் நன்றாகத் தூங்கிய தாசப்பாவுக்கு இரவு ஒன்பது மணியாகியும் தூக்கம் வரவில்லை. அரசரின் மூன்றாவது அறிவுரையையும் முதல் நாளே நிறைவேற்றி விட வேண்டுமென்று சாணை தீட்டப்பட்ட கத்ரிக்கோலுடன் வந்திருந்தான் அவன்.

எல்லாக் குமாஸ்தாக்களும் களைத்து அவரவர் இருக்கையிலேயே உறங்கி விட்டனர். 'கடகட'வென்று ஒவ்வொருவர் குடுமியாகக் கத்தரித்து அங்கவஸ்திரத்தில் போட்டு மூட்டையாகக் கட்டி வீட்டுக்கு எடுத்துச் சென்றான் தாசப்பா.




"நமக்கு ஏன் அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கிறது, சொல் பார்க்கலாம்?"

"நம் மூக்கின் மேல் இரண்டு ஐஸ் இருக்கிறதுனால சார்!"

- அனுராதா ராஜப்பா,
வத்தலகுண்டு

அவன் மனைவி கோபமாக ''கரி பூசிய உங்கள் முகத்தைப் பார்க்க சகிக்கவில்லை! உங்களுக்கு தாசில்தார் பதவிதான் முக்கியம் என்றால் நான் என் பிறந்த வீட்டுக்குப் போகிறேன்'' என்று சீறினாள்.

''கோபிச்சுக்காதே! சுறுசுறுப்பா ஓடிக் கொண்டிருந்த எனக்கும் இந்தக் குடுமி கத்தரிக்கிற, காதைக் கடிக்கிற, கரி பூசிக்கிற வேலை பிடிக்கலே! விடிஞ்சா போக விட மாட்டாங்க. இப்பவே கிளம்பலாம் வா, நல்ல வேளை மூட்டைகளைப் பிரிக்கலே! வீட்டுக்குப் போய் முருங்கைக்காய் சாம்பாரும் அவரைக்காய் பொரியலும் பண்ணிப் போடு'' என்று தாசப்பா கிளம்பினான். தாசப்பா திரும்பி வந்ததில் அரசருக்கும் நிம்மதி! ●







ஜப்பானின் மறு பெயர் உழைப்பு! ஜப்பானிய மக்கள் தேனீக்கள் போல் எந்நேரமும் சுறு சுறுப்புக்குப் பெயர் பெற்றவர்கள். 1945ல் நடந்த இரண்டாம் உலகப் போரில், ஜப்பானின் கால் பகுதி கட்டடங்கள் மண்மேடாயின. அன்றைக்கு அவர்களுக்கு ஒரு நாளைக்கு கிடைத்த உணவின் அளவு 1000 கலோரி மட்டுமே! (குறைந்தது 2400 கலோரி வேண்டும்). ஆனால் இன்று... உலகின் பொருளாதாரச் சந்தையில் மிகப் பெரிய அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் நிற்பது ஜப்பான்தான். அந்த அளவுக்கு ஜப்பானின் மின்னணுவியல் சாதனங்கள் உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் வலம் வருகின்றன. உழைப்பால்

மோகனா

உயர்ந்தவர்கள் ஜப்பானியர்கள்.


பசிபிக் பெருங்கடலில் மிதந்து கொண்டிருக்கும் குட்டி நாடுதான் ஜப்பான். ஜப்பான் என்றதுமே நம் நினைவுக்கு வருபவை தொலைகாட்சி பெட்டிகள், காமிராக்கள், ரோபோட்கள் தான். இது வட பசிபிக் பெருங் கடலில் அமைந்துள்ளது. ஆசியா கண்டத்தின் கிழக்கு கடற்கரை







உழைப்பால் உயர்ந்தவர்கள்!





ஓரத்தில் 4 தீவுகளைக் கொண்டது ஜப்பான். இதனைச் சுற்றி, இன்னும் நிறைய குட்டித் தீவுகள் உள்ளன. ஜப்பானியர்கள், ஜப்பானைச் செல்லமாக 'நிப்பான்' என்றே அழைக்கின்றனர். இதற்கு 'சூரியனின் உதயம்' என்று பொருள். சீனப் பேரரசின் கிழக்கே இருப்பதாலும், சூரியனின் உதயத்தைக் கிழக்கே அமைந்துள்ள ஜப்பானியர்கள்தான் முதலில் தரிசனம் பண்ணுவதாலும் ஆங்கிலேயர்கள், ஜப்பானை சூரிய உதய நிலம் என்று குறிப்பிடுகின்றனர்.

ஜப்பானின் பெரும்பகுதி மலைகளால் நிறைந்துள்ளது. சுமார் 75 - 80 சதம் மலைகள். இவைதான் இவர்களின் போக்குவரத்துக்கு, தேசிய ஒருமைப்பாட்டுக்கு, பொருளாதார வளர்சசிக்குத் தடை என எண்ணிக் கொண்டிருந்தது ஒரு காலம். இன்று தடைகளை உழைப்பால் உடைத்து, உலகப் பொருளாதாரத்தின் உச்சியில் நிற்கிறது. ஜப்பானின் மலைகளை ஒட்டியுள்ள பள்ளத்தாக்குகளில் பெரும் பகுதி 'தேசியப் பூங்கா'வாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. உலகின் மக்கள் தொகை மிகுந்த நாடுகளில் ஜப்பானும் ஒன்று. மக்கள் பெரிதும் பயன்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்வதில்தான் ஜப்பானின் வருமானம். மின்னணுவியலில் புதிய, புதிய கண்டுபிடிப்புகளுடன், தொழில் நுட்பயுக்தியுடன், உலகின் முன்னணியில் நிற்கிறது ஜப்பான். சமீபத்தில் மிகச் சிறிய 'வெப் கேமிரா' உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.


கி.பி. 7ம் நூற்றாண்டு வரை சக்கரவர்த்திகளாலும், பின் 19ம் நூற்றாண்டு வரை இராணுவத்தாலும் ஆட்சி செய்யப்பட்ட ஜப்பான், கடந்த 100 ஆண்டு காலத்தில் மேற்கத்திய நாடுகளுடன் வாணிபம் செய்து, நவீனத்துவத்துடன் தொழில்மயமான நாடாக முன்னேறியது. 20ம் நூற்றாண்டில் தொழில் உற்பத்தியிலும் பொருளாதாரத்திலும் உலக நாடுகளை வென்றது மக்களின் உழைப்பும் அரசின் திட்டங்களுமே!



ஜப்பானியர்கள் மூட நம்பிக்கைகளிலும் கடவுள் வழிபாட்டிலும் பாரம்பரிய பழக்க வழக்கங்களிலும் ஊறிப் போனவர்கள்.

ஜப்பானில் தொடர்ந்து நில நடுக்கங்கள் வந்து கொண்டே இருக்கும். இது ஜப்பானிய மக்களுக்கு, சூரியன் உதித்து மறைவது போன்ற தினசரி நிகழ்வு தான். வருடந்தோறும் சுமாராக 1500 புவிநடுக்கங்கள் ஜப்பானில் ஏற்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை இலேசானது; பாதிப்பு ஏற்படுத்தாதது. உயிர்களைப் பலி வாங்குவதில்லை. அப்படியே வீடுகளை ஒரு குலுக்கு குலுக்கும். பூமி அதிரும். பாத்திரங்கள் உருளும். இதுவரை வந்த பூகம்பங்களில் 1923ல் காண்டா பகுதியில் வந்ததுதான் மிகப் பெரிய பேரழிவை உண்டாக்கியது. இதன் விளைவால், நில அதிர்வுகளைத் தாங்கும் தன்மையுள்ள வீடுகளை நிர்மாணிப்பதில், அமெரிக்கர்களையும் விஞ்சிவிட்டனர் ஜப்பானியர்கள். சுனாமியிலும் பூகம்பத்திலும் தப்பிக்கும் கலையைக் கற்றுத் தெளிந்த வல்லவர்கள் ஜப்பானியர்கள். அங்குள்ள 188 எரிமலைகளில், 40 எரிமலைகள் இன்றும் உயிருடன் கனன்று கொண்டிருக்கின்றன. ஹோன்ஷூதான் ஜப்பானியத் தீவுகளில் மிகப் பெரியது. 'தோஹோகு' என்ற பகுதிதான் ஜப்பானின் விவசாயப் பகுதி. இங்குள்ள 'காண்டா' நகரம்தான் அரசியல், கலாசாரம், பொருளாதாரத்தின் மையப் பகுதி. இதனையே 'ஜப்பானின் இதயம்' என்று அழைக்கின்றனர். ஜப்பானின் பெரிய மலை 'ப்பியூஜி'. இங்குள்ள 'கியூஷூ' எரிமலை சுற்றுலா பயணிகளை ஈர்த்துள்ளது. இதனைச் சுற்றியுள்ள வெந்நீர் ஊற்றுகளில் குளிக்க பயணிகள் நிறைய வருவதால், தங்கும் விடுதிகள் நிறையக் கட்டப்பட்டுள்ளன. 'சாகுராஜிமா' என்ற எரிமலை, 1955லிருந்து இதுவரை 5000 முறை வெடித்துள்ளது.

ஜப்பானின் கடற்கரை சீரற்றது. இதன் நீளம் 29,750 கி.மீ. ஜப்பானில் நிறைய மலைப்பகுதிகள் உள்ளதால், பெரிய நீண்ட ஆறுகள் கிடையாது. உலகின் நீர்மின்சக்தி உற்பத்தியில் ஜப்பான் முன்னணியில் நிற்கிறது. உலோகம், கனிம வளங்கள் இல்லாத நாடு ஜப்பான். இருப்பினும் தொழில் துறையில், முக்கியமாக தொலைகாட்சி பெட்டிகள், காமிரா, கடிகாரம், கப்பல், கார்கள் உற்பத்தியில் வெற்றி நடைபோடுகிறது. இங்கு 28 தேசிய பூங்காக்களும், 350 சிறிய பூங்காக்களும் 28 கடற்கரை பூங்காக்களும் உள்ளன.



''நான் நீச்சல் கத்துக்கறேன்!''
''எங்கே?''
''தண்ணியிலேதான்!''

- ஆர்.ஆர். பூபதி,
கன்னிவாடி





'கிமோனோ' என்பது ஜப்பானியர்களின் பாரம்பரிய உடை. ஆனால் இப்போது பெரும்பாலும் மேற்கத்திய உடையே புழக்கத்துக்கு வந்துவிட்டது. கிமோனோ உடை விசேஷ நாட்களில் மட்டுமே அணியப்படுகிறது. பிறப்பு விகிதம் மிகவும் குறைவு. இன்னும் 408 வருடங்கள் ஆனால்தான் இவர்களின் மக்கள் தொகை இரட்டிப்பாகும். 1995ல் இளைஞர்களை விட, முதியோர் எண்ணிக்கை அதிகம்!

'ஜப்பானீஸ்தான்' ஜப்பானின் அரசியல் மொழி. ஜப்பானிய வார்த்தைகள், சீனத்திலிருந்து உருவானவை. மக்களில் 99% கல்வி அறிவுள்ளவர்கள். ஜப்பானில் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு மற்ற நாடுகள் போல் தெரியாது.

புது வருடத்தை விரும்பிக் கொண்டாடுகின்றனர். நண்பர்கள், விருந்தினர் வீடுகளுக்கு குடும்பத்துடன் சென்று பரிசளித்து மகிழ்வர். விதம் விதமான 'போன்சாய் மரம்', இனிப்பு வகைகள், விசிறிகள் போன்றவை இவர்கள் பரிசின் சிறப்பு அம்சங்கள். வீடுகளை மூங்கில் தண்டுகளால், மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்வர்.

நிறைய ஜப்பானிய விழாக்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையே. இவர்களின் கலாசாரமும் பீங்கான் பொம்மை, பாத்திரங்களும் உணவு வகைகளும் தனித்துவம் பெற்றவை. ஜப்பானிய விளையாட்டுக் கலைகளான ஜூடோ, சுமோவை நாம் மறக்க முடியுமா?

கையால், வேலைப்பாட்டுடன் செய்யப்பட்ட மண்பாண்டங்களைச் செய்வதில் வல்லவர்கள். உலகின் வெகு வேகமான 'புல்லட் ரயில்' இங்குதான் ஓடுகிறது. சென்ஜோ-ஜி என்ற 1370 ஆண்டு வரலாற்று சிறப்புமிக்க கோயில் உள்ளது. இங்கு 3 அடி உயர சிவப்பு விளக்கு வாசலில் இருக்கிறது. ●

சாதனை

வீட்டில் நம் அம்மா நம்மிடம் ஏதாவது ஒரு வேலை கொடுத்தால் என்ன செய்வோம்...? ''பீப்... பீப்'' - என்று ஹார்ன் அடித்தபடி, டூவீலர் ஓட்டுவது போல கற்பனை செய்து கொண்டே அந்த வேலையைச் செய்வோம். அதைப் போலவே, சென்னையில் விஷால்வேல் அவனுடைய அம்மா ஏதாவது ஒரு வேலை சொன்னால், அதைக் காலால் தரையில் சறுக்கிய படியே செய்வான். முதலில் அவனுடைய அம்மா, ''டேய்... கால் சுளுக்கிக்கப் போகுதுடா...'' என்று தடுத்தாலும், இவன் அந்தப் பழக்கத்தை விடவே இல்லை. விளைவு இன்று விஷால்வேல் ஸ்கேட்டிங் விளையாட்டில் தமிழ்நாட்டின் ஆறு முதல் எட்டு வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் ஒரு ஸ்டார்



அண்ணனுக்கு குரு தம்பி!



பிளேயர்.

சரி... ஸ்கேட்டிங் விளை யாட்டை எப்படி கற்றுக் கொண்டான்...? எப்படி அதில் ஆர்வம் வந்தது? விஷால் வேல் தனது பிஞ்சுக் குரலில் பேசினான்.

''அம்மா என்னை ஸ்டார் ஸ்போர்ட்ஸ், ஈ.எஸ்.பி.என்., போகோ மட்டும்தான் பார்க்க விடுவாங்க. ஸ்டார் ஸ்போர்ட்ஸ்லதான் ஸ்கேட்டிங் விளையாடறதைப் பார்த்தேன்.



* உன்னிகிருஷ்ணன்

அது மாதிரி நானும் விளை யாடணும்னு ஆசையா இருந் தது. வீட்ல தரை இருக்குல்ல. அதுலயே சறுக்கி சறுக்கி பார்ப்பேன். ஒரு நாள் அப்பா இதைப் பார்த்துவிட்டு உன்னி கிருஷ்ணன் மாஸ்டர் கிட்ட என்னை ஸ்கேட்டிங் கத்துக்க அனுப்பினாங்க...''

''அங்கிள்... எங்க வீட்ல எவ்ளோ மெடல்ஸ், கப்ஸ், சர்டி ஃபிகேட்ஸ் எல்லாம் இருக்கு தெரியுமா! வீட்டுக்கு வாங்க. எல்லாத்தையும் கவுன்ட் பண்ணி சொல்றேன்...'' என்று சொல்லிவிட்டு, பிராக்டீஸில் பிஸியாகிவிட்டான்.

விஷாலின் பெற்றோர் யுவ ராஜ் - பானுரேகா என்ன சொல் கிறார்கள்...?

''வழக்கமா எல்லாப் பசங் களும் கிரிக்கெட், டென் னிஸ்னு ஆசைப்படுவாங்க. ஆனா நம்ம பையனை ஏதாவது வித்யாசமான கேம்ல பெரிய ஆளா கொண்டு வரணும்னு ஆசைப்பட்டோம். அதுக்கு ஏத்த மாதிரி விஷா லுக்கு ஸ்கேட்டிங் நல்லா வரவே, 2004ல் அண்ணா நகர் ரோலர் ஸ்கேட்டிங் கிளப்ல சேர்த்துவிட்டோம். தினம் ஸ்கூல் முடிஞ்ச பிறகு மூணு மணி நேரம் பிராக்டீஸ். அவன் ஒரு குயிக் லேர்னர். அதனால சீக்கிரம் பிக்-அப் ஆகி, ஸ்கேட் டிங்ல இருக்குற டைமிங் ரேஸ், குரூப் ரேஸ், ரோடு ரேஸ் மூன்றிலுமே எக்ஸ்பர்ட் ஆயிட் டான்'' என்று பெற்றோர் பேசிக் கொண்டிருக்கும் போதே குறுக்கிட்டார் பயிற்சியாளர் உன்னி கிருஷ்ணன்.

''ஆறு வயதுக்குட்பட்ட குரூப்லதான் விஷால் விளை யாட வந்தான். ஸ்ட்ரோக், ஸ்டைல் எல்லாமே ரொம்ப வித்தியாசமா இருக்கும் இவ னுக்கு. அதனாலயே மாவட்ட



அளவில் நடக்கும் நிறைய போட்டிகள்ல கோல்டு, சில்வர்னு வாங்கினான். இப்போ 6 - 8 குரூப்ல விளையாடிட்டு இருக்கான். விஷால் இப்போ ஸ்டேட் லெவல் ப்ளேயர்... விளையாட ஆரம்பிச்சு ஒன்றரை வருஷத்துக்குள்ள ஸ்டேட் பிளேயரா வர்றது ரொம்ப சிரமமான விஷயம். நிச்சயமா ஒரு நல்ல இண்டர்நேஷனல் பிளேயரா விஷாலைப் பார்க்கப் போறீங்க. அப்பவும் நீங்க பேட்டி எடுக்க வேண்டி வரும்'' என்று சிரிக்கிறார் பயிற்சியாளர் உன்னி கிருஷ்ணன்.

சமீபத்தில் நடந்த ஸ்டேட் மீட்டில் கலந்து கொள்ள பிராக்டீஸ் செய்து கொண்டிருக்கும்போதே திடீரென விஷாலுக்கு ஜுரம் வந்துவிட, ''ஐயோ... கோல்டு மிஸ்ஸாயிடிச்சி'' என்று எல்லோரும் பயந்து விட்டார்கள். ஆனாலும் விஷால் அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாமல் போட்டியில் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கத்தை வாங்கி வந்தான். இது அவனுடைய தன்னம்பிக்கைக்குக் கிடைத்த பரிசு என்று சொல்லும் விஷாலின் அப்பா தற்போது அவனை தேசிய அளவிலான போட்டிகளுக்குத் தயார் செய்து வருகிறார்.


பொதுவாக நம் வீட்டில் அண்ணன் விளையாடும் விளையாட்டைப் பார்த்து தம்பியும் விளையாடுவது வழக்கம். ஆனால் விஷால்வேல் விஷயத்தில் இது நேர்மாறானது. ஆம்... தம்பி விஷாலைப் பார்த்து அண்ணன் ஆதித்ய சரண் ஸ்கேட்டிங் விளையாட ஆரம்பித்துள்ளான். தற்போது இருவரும் ஒரே குரூப்பில் விளையாடி, பதக்கங்களை வேட்டையாடி வருகின்றனர்!

- இரா.முத்துக்குமார்


படங்கள் : **ராஜன்**

நிம்மதி

படம், கதை : ராம்கி





அதெல்லாம் வேண்டாம். உங்கள் அன்பு மட்டும்போதும் அண்ணா.
குட்டிப்பயலே மறுக்காதே, இதில் தங்கக் காசுகள் இருக்கிறது. வைத்துக்கொள்.
ரொம்ப நன்றி அண்ணா!
அதன் பின்தான் விபரீதங்கள் தோன்றின.
தங்கமோ விலை உயர்ந்தது. எங்கே பத்திரமாக வைப்பது?
கடைசியில் தோட்டத்தில் தங்கத்தைப் புதைத்து வைத்தது முயல்.
அப்பாடா! போய் தூங்குவோம்!
நள்ளிரவில் -
நாம் தங்கத்தைப் புதைத்ததை யாராவது பார்த்திருப்பார்களோ? யாராவது தங்கத்தைத் திருடிவிட்டால்... ஐயோ!



தங்கத்தை எடுத்து வந்து தலையணைக் கடியில் வைத்துக் கொண்டு தூங்க முயற்சி செய்தது.
தூங்கினால் யாராவது தங்கத்தை தூக்கிச் சென்று விடுவார்களோ?
அதேநேரம் நரி வீட்டில் -
எப்போதும் சந்தோஷமாக இருக் கும் முயல் வீட்டி லிருந்து எந்தச் சத்தமும் வரவில்லை. இதைத் தான் எதிர்பார்த்தேன்.
மறுநாள் காலை -
பரிசை திரும்பக் கொடுப்பதற்கு என்னை மன்னியுங்கள்.
என்னப்பா சொல்ற?
என் நிம்மதி தொலைந்து விட் டது. பயந்தே செத்துவிடுவேன் போலிருக்கு. தங்கம் எனக்கு வேண்டாம். நான் வரேன்.
அடுத்த நாள் -
ஹே... லலல்லா.... லா....
முயல்தான் பாடுகிறான். அவன் மகிழ்ச்சியான வன் மட்டுமல்ல, அறிவாளியும் கூட....

குறுக்கெழுத்துப் புதிர்

கட்டங்களை நிரப்புங்கள்



இடமிருந்து வலம் :

1. பெரும்பாலான கிராம மக்கள் வழிபடும் பெண் தெய்வம் (4)
7. தலைக்கனம் என்பதை இப்படியும் சொல்லலாம் (4)
8. பிரம்மாவின் புத்திரர் (4)
9. அடுப்பு எரிக்க உதவும் (3)
11. அபாய வண்ணம் (4)
13. அனுமதியின்மை (2)

வலமிருந்து இடம் :

3. ஒரு வகை ஜோக் (2)
4. பெண்களின் அணிகலன் (4)
6. முன்பு தூத்துக்குடியிலும் தற்பொழுது ஹைதராபாத்திலும் பிரபலம் (3)
14. இவர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும் (4)

மேலிருந்து கீழ் :

1. இது உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள் என்பது பழமொழி (2)
2. நவரத்தினங்களுள் ஒன்று (4)
8. திருநெல்வேலி மாவட்டத்துக்கு சுருக்கமாக இவ்வாறு அழைப்பர் (4)
9. மகாபாரதத்தை இயற்றியவர் (4)
10. பகை (4)

கீழிருந்து மேல் :

5. நம்பியவரை ஏமாற்றும் செயல் (4)
6. தமிழ்க் கடவுள் (4)



7. மீன் (3)
12. குற்றச்சாட்டு (3)
14. பொருள்களை வாங்குமிடம் (2)

- எஸ். கவிதா,
திருநெல்வேலி

விடை 95ம் பக்கம்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி


இங்கு 5 கேள்விகளும் 6 படங்கள் மற்றும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பம் அவசியம். முகவரி கூப்பனை ஒட்டி உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. **கடைசித் தேதி 20.07.2005.**

I. பதில் என்ன?

1. நயாகரா ஆற்றிலிருந்து நயாகரா நீர் வீழ்ச்சிக்குத் தண்ணீர் வருகிறதா?

2. நயாகரா நீர்வீழ்ச்சி எந்த இரண்டு நாடுகளின் எல்லைகளில் இருக்கிறது?

3. இதன் வயது சுமார் 12,000 ஆண்டுகள். சரியா?



4. உலகில் முதல் ஹைட்ரோ பவர் ஸ்டேஷன் இங்குதான் துவங்கப்பட்டதா?

5. நொடிக்கு 6 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொட்டுகிறது. சரியா?

II. பழங்களின் பெயர்களைச் சரியாக எழுதுங்கள்.













மங்குஸ்தான்,
ஆப்பிள், திராட்சை,
ப்ளம், செர்ரி,
ஸ்ட்ராபெரி

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



யானைக்கு மனிதரைப் பார்க்கும்போது, மிகவும் பெரிய உருவமாக தெரியுமாம். அதுதான் மனிதர்களின் இம்சைகளை யானை பொறுத்துக் கொள்கிறது. யானையின் கண் சிறியதாக இருந்தாலும் பார்வையின் சக்தி அதிகம்.

- ஆ.கீதா, வேலூர்

மிகவும் சிறிய இதயம் கொண்ட விலங்கு சிங்கம். சிங்கத்திற்கு எப்போதும் தனியாக இருக்கப் பிடிக்காது. எங்கு சென்றாலும் தன் குடும்பம் அனைத்தையும் கூடவே அழைததுச் செல்லும். வேட்டையாடுவதில் ஆண் சிங்கத்தை விட பெண் சிங்கமே சிறந்து விளங்கும். பெண் சிங்கம் வேட்டையாடி ஒரு பிராணியைக் கொன்றாலும் அந்த இரையை ஆண் சிங்கத்திடம் இழுத்துவந்து விடும். முதல் சாப்பாடு ஆண் சிங்கத்திற்கு தான்.

- சு.கண்ணகி, மிட்டூர்

ஒளியால்



சூரியக் கதிர்களே இயற்கை கிருமிநாசினி. அதில் அல்ட்ரா வயலட் எனப்படும் புற ஊதா கதிர்கள் உள்ளன. இவை இயல்பாகவே மனிதன், கால்நடைகள், தாவரங்கள் இவற்றின் மேல் படிந்து தாக்கும் மிகச் சிறிய நோய்க் கிருமிகளை அழித்துவிடுகின்றன. நாம் அறியாமலேயே இயற்கை நமக்குச் செய்யும் மிகச் சிறப்பான பாதுகாப்பு!

- ச. அழகுவேல், கன்னிவாடி



ஜப்பானில் கடலுக்கடியில் இரண்டரை மைல் நீளத்திற்கு ஒரு சுரங்கப்பாதை அமைத்துள்ளனர்.



இதைச் செய்துமுடிக்க இருபது ஆண்டுகள் பிடித்தது. இரண்டடுக்கு மோட்டார்கள் அப்பாதையில் செல்ல இயலும். கால்நடை போக்குவரத்துக்கும் தனிப் பாதை உண்டு.

உலகிலேயே இரண்டாவது மிகப் பெரிய பொது சுரங்கப் பாதை இது தான்.

- ஜெயஸ்ரீ,
சங்கரன்
கோவில்


பூச்சிகளைக் கவரும்!



டிராஸிரா ஒரு சிறு செடி. இதன் இலைகள் கொத்துக் கொத்தாகக் கரண்டி வடிவில் காணப்படும். இலைத்தாளின் விளிம்பில் சுரப்பிகள் கொண்ட பல உரோமங்கள் உள்நோக்கி வளைந்து அமைந்திருக்கும். இவற்றில் பளபளக்கும் பொருள் பனித்துளி போல காணப்படும். அதுவே சூரியப்பனி எனப்படும். இது ஒளி வீசிப் பூச்சிகளைத் தன்பால் கவர்ந்து இழுக்கும். கவரப்படும் பூச்சிகள் இலைப் பரப்பின்மீது வந்து அமர்கின்றன. அப்போது உரோமங்கள் உள்நோக்கி வளைந்து பூச்சிகள் வெளியேறா வண்ணம் தடுத்து விடுகின்றன. சுற்றிலும் உள்ள சுரப்பிகள் நொதிகளைச் சுரக்கின்றன. இவற்றால் பூச்சிகள் சிதைக்கப்பட்டுச் செரிக்கப் படுகின்றன!

- ஜோதி,
ஸ்ரீபெரும்புதூர்





நண்பர்களின்

முத்தப்பன், அய்யாச்சாமி, முனியப்பன், நல்லான் நண்பர்கள்.

''இன்னிக்கி நாம கண்ணாமூச்சி விளையாடுவோமே!'' நல்லானின் பேச்சுக்கு அனைவரும் சரி என்று ஒத்துக் கொண்டு புறப்பட்டனர்.

காட்டிலேயே வயதான குரங்கு குஞ்சப்பன் தாத்தா நல்லானின் கண்களை மூடிக் கொள்ள, மற்றவர்கள் மறைவான இடம் தேடி விரைந்து ஓடலானார்கள்.



இவர்களின் நடவடிக்கைகளை அங்கிருந்தபடியே கவனித்துக் கொண்டிருந்தது ஓணான்.

மிக வேகமாக ஓடிய அய்யாச்சாமி இலவங்காட்டுக்குள் நுழைந்தது. அக்காட்டிலேயே மிக அதிக உயரத்துடன் இருந்த இலவ மரத்தை

பா.முருகேசன்



அடைந்தது.

''உயரே வளாந்த
இலவ மரமே!
உன்னில்
நானும் ஒளிந்து
கொள்ள
உரிய
இடத்தை தந்திடு
மரமே!
நல்லான் என்
னைத் தேடும்போது
நானிங்கு இருப்
பதை அறியாவிதமாய்
நல்ல பொருளால் மூடிடு
என்னை'' என்று இலவ மரத்தைக் கேட்டது.

புது அவதாரம்!

அய்யாச்சாமியின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட இலவ மரமும் தனது காய்களைக் கொண்டு அய்யாச்சாமியை மறைத்துக் கொண்டது. அய்யாச்சாமிக்கு சந்தோஷம் தாளவில்லை.

தன் தோலின் மேல் ஏதேனும் ஒரு மாற்றத்தைச் செய்ய ஆசைப் பட்டது.

தனக்கு அருமையான உடலமைப்பை கொடுத்த இலவ மரத்திடமே அது தன் எண்ணத்தைக் கூறியது. அய்யாச்சாமியின்



எண்ணத்தை நிறைவேற்றும் விதமாக இலவமரம் பதில் கூறியது.

அதன்படி தான் உடலில் போர்த்திக் கொண்ட இலவங்காயின் மீது அருகிலிருந்த ரப்பர் மரத்தின் பாலை 3 கோடுகளாக தடவிக் கொண்டு மீண்டும் இலவ மரத்தை அடைந்து தன் உடல் அழகை மரத்திடம் காட்டியது. அய்யாச்சாமியின் அழகினைக் கண்ட இலவமரம் அதற்கு 'அணில்' என்று பெயரிட்டு தன் மரத்தில் ஒளிந்து கொள்ள இடமளித்தது.

இரண்டாவதாக வந்த முத்தப்பன் விரைந்து ஓடி அங்கிருந்த பருத்திக் காட்டை அடைந்தது. முத்தப்பன் அங்கிருந்த பருத்திச் செடிகளின் உதவியோடு தன் உடலைப் போர்த்திக் கொள்ளும் அளவுக்கு பருத்தி எடுத்து உருட்டி தன் உடலின் மீது சுற்றிக் கொண்டது.



இவர் பெயரில் ஓர்
இந்திய நகரமே
இருக்கிறது.

பஞ்சு சுற்றிய உடலுடன் காணப்பட்ட முத்தப்பனுக்கு 'முயல்' என்று பெயரிட்ட பருத்திச் செடி தன் தோட்டத்துக்குள் அது ஒளிந்து கொள்ள அனுமதி அளித்தது. பருத்திச் செடியின் அனுமதி கிடைத்தவுடன் முயல் முத்தப்பன் ஆழமாக ஒரு குழியை உருவாக்கி அதனுள் சென்று தன்னை மறைத்துக் கொண்டது.

இதற்கிடையே ஒளிந்து கொள்வதற்காக சென்ற முனியப்பன் நீண்ட நேரம் அங்குமிங்குமாக அலைந்து தனக்கேற்ற இடம் கிடைக்காத வருத்தத்தில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே நடந்து வந்தது. அது வரும் வழியில் இருந்த ஒரு ஊமத்தைச் செடி முனியப்பனை அழைத்தது.

"முகத்தை மறைத்து
வருபவனே
மனக்கவலை ஏனோ
சின்னவனே
அகத்தில் இருக்கும்
வருத்தம் தீர
அன்புடன் உதவியை
நான் தருவேன்
குத்தும் முட்களை
காய்களில் பார்"

என்று ஊமத்தைச் செடி வேண்டிக் கொண்டது.

ஊமத்தை செடியின் காய்களைப் பறித்து அவற்றை உரித்து முட்களுடன் கூடிய மேல் பகுதியை தைத்து தன் உடலின் மேல் போர்த்திக் கொண்டது.

அது நடந்து வரும் வழியில் தென்படும் அனைவரிடமும் தன் பெயர் 'முள்ளம் பன்றி' என்று கூறிக் கொண்டே வந்தது.

இங்கு நடப்பதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஓணான் ஒன்று நல்லானுக்கு உதவி செய்வதற்காக மெதுவாக இறங்கி வந்து நல்லானை அழைத்தது.

''நண்பனே, நண்பனே,
நல்லானே
சின்னவன் ஓணான்
அழைத்தேன்
உன்னை இங்கே
விட்டு விட்டு
ஓடியே சென்றனர் வெகுதூரம்
நண்பர்கள் அவர்கள் உருமாறி
நலமாய் இருப்பர் மகிழ்வோடு
நீயும் அவர்களைக்
கண்டு கொள்ள
நீண்ட கால்களை
எடுத்துக் கொள்
நாயின் உடலை
பெற்றுக் கொள்
நாய் போல் ஓடிடக் கற்றுக் கொள்'' என்றது.

ஓணான் கூறியதைக் கேட்ட நல்லான், நாயின் உடலை கேட்டு தன் உடலை அதனுள் புதைத்துக் கொண்டது. அதனைக் கண்ட குரங்கு குஞ்சப்பன் தாத்தா நல்லானுக்கு 'நரி நல்லான்' என பெயரிட்டு அனுப்பி வைத்தது.

நரியாக உருமாறிய நல்லான் தன் நண்பர்களைத் தேடி வேகமாக ஓடியது. பருத்தி தோட்டத்தில் பதுங்கிய முயல் முத்தப்பன் தன் பஞ்சு போன்ற உடலை வெயில் படாமல் பாதுகாப்பதற்காக குழி வீட்டிற்குள் அமைதியாக தூங்க அரம்பித்தது.



''எங்க வீட்ல இருக்கிற எலி, எல்லாரையும் கடிக்குதுடா. ஆனா எங்க அண்ணனை மட்டும் கடிச்சதே இல்லை.''

ஆச்சர்யமா இருக்கே! எப்படிடா?''


''எங்க அண்ணன் 'பொறி'யியல் படிக்கிறதுனால!''

- அனுராதா ராஜப்பா,
வத்தலகுண்டு

இலவ மரத்தில் அடைக்கலம் அடைந்த அணில் அய்யாச்சாமி மரத்திலேயே கூட்டைக் கட்டி வாழத் தொடங்கியது.

ஊமத்தைச் செடியின் காய்களிடமிருந்து உடல் மாற்றம் பெற்ற முள்ளம்பன்றி மட்டும் தன் நண்பனான நல்லானைத் தேடி காட்டுக்குள் வந்தது. பாவம் அதற்கு தன் நண்பன் நரியாக உருமாறியது தெரியாது.

இன்றும்கூட தன் நண்பர்களைத் தேடி நரி நல்லான் ஓடிக் கொண்டேயிருப்பதையும், மரத்தில் கூடு கட்டி நல்லான் நல்லான் என்று கத்திக் கொண்டே அலையும் அணில் அய்யாச்சாமியையும், பருத்தித் தோட்டத்தில் வளைக்குள் தூங்கும் முயல் முத்தப்பனையும் இவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்துவிட வேண்டும் என முழு மூச்சோடு திரியும் ஓணானையும் நாம் காணலாம். ●


கோகுலம்
போஸ்டர்
Nimbus 2000


குழந்தைகளின் ஹீரோ
ஹாரி பாட்டர்!

மூன்று சல்லடைகளில் சலிக்க வேண்டும்!

பயனுள்ள பேச்சு!

சாக்ரடீஸைக் காண்பதற்காக அவரது நண்பர் ஒருவர் வந்தார்.



* சாக்ரடீஸ்

நண்பர் ''இந்த விஷயத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டீர்களா?'' என்று ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றிக் கூற வந்தார். ''நீ எதைச் சொல்ல வந்தாலும் சொல்ல வந்த விஷயத்தை மூன்று சல்லடைகளில் போட்டுச் சலித்துப் பார்க்க வேண்டும்'' என்றார் சாக்ரடீஸ். ''மூன்று சல்லடைகளா, எனக்குப் புரியவில்லையே!'' என்று கூறினார் நண்பர். ''முதல் சல்லடை என்பது உண்மையற்ற விஷயங்களை வடிகட்டுவது! ஆகவே நீ சொல்ல வந்த விஷயம் உண்மையானதா என்று சொல்லு'' என்றார். ''அதைப் பற்றி எனக்குத் தெரியாது.'' சாக்ரடீஸ், ''சரி இப்பொழுது இரண்டாவது சல்லடைக்கு வருவோம். நீ சொல்ல வந்த செய்தி நல்லதா, கெட்டதா என்பதை வடிகட்டுவது!'' அவர் ''நான் சொல்ல வந்த செய்தி நல்ல செய்தி இல்லை'' என்றார். ''இப்பொழுது மூன்றாவது சல்லடைக்கு வருவோம். நீ சொல்ல வந்த செய்தி மற்றவர்களுக்குத் துன்பம் தருவதை வடிகட்டிவிடும். இந்தச் செய்தியால் நன்மையாவது, மகிழ்ச்சியாவது உண்டாகுமா?''

''நான் சொல்ல வந்த செய்தி



* சி.வி.ராமன்

யால் நன்மை ஏற்பட வழியில்லை. எனவே, நான் வருகிறேன் நன்றி!'' என்று கிளம்பினார் நண்பர்.

- ஆ.கீதா,
அகரம்



* லாயிட் ஜார்ஜ்

விளைவு...

'இராமன் விளைவு' என்ற அரிய கண்டுபிடிப்பை கண்டு பிடித்ததற்காக அறிவியல் மேதை சர்.சி.வி. ராமனுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. மேலை நாட்டில் அவரை ஒரு விருந்துக்கு அழைத்திருந்தனர். அந்த விருந்தில் மது அருந்துமாறு எல்லோரும் அவரை வற்புறுத்தினார்.

அப்போது சி.வி. ராமன், ''ஆல்கஹால் மீது ராமன் விளைவைப் பார்த்து விட்டீர்கள். இப்போது, ராமன் மீது ஆல்கஹால் விளைவைப் பார்க்க ஆசைப்படுகிறீர்கள். அப்படித்தானே!'' என்று நகைச்சுவை ததும்பக் கூறி மது அருந்துவதைத் தவிர்த்து விட்டார்.

- கே.ஜி.ரூபிணி, திருப்பூர்

சிறந்த கண்டுபிடிப்பு!

சர் ஹம்பிரி டேவி விஞ்ஞானியிடம் அவர் கண்டு பிடிப்புகளில் எது சிறந்தது என்று கேட்டபோது, ''பல ஆண்டுகளாக நான் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளில் தலைசிறந்த கண்டு பிடிப்பு மைக்கேல் ஃபாரடே தான்'' என்று டைனமோவைக் கண்டுபிடித்த ஃபாரடேயைப் புகழ்ந்து கூறினார்!

- ஜோதி, ஸ்ரீபெரும்புதூர்

சுதந்திரம்

பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த லாயிட் ஜார்ஜ், ''எல்லா நாடுகளுக்கும் எல்லா இடங்களில் இருப்போருக்கும் சுதந்திரம் மிக அவசியம்'' என்று ஒரு கூட்டத்தில் பேசினார்.

அவரைக் கேலி செய்ய எண்ணிய ஒருவன், ''நரகத்திற்கு?'' என கூட்டத்திலிருந்து கூச்சலிட்டான்.



* சர் ஹம்பிரி டேவி

இதற்குப் பதில் கூறும் வகையில் லாயிட் ஜார்ஜ், ''இப்படி ஒவ்வொருவரும் தத்தம் நாட்டுக்காகப் பரிந்து பேச வேண்டும் என்பதுதான் நான் சொல்ல வந்தது'' என்றார்!

- குட்டி பிரசன்னா, கரூர்

யாருடைய

* ஈராக்கில், சதாம் உசேனை ஒழிக்க அமெரிக்கப் படைகள் காலடி வைத்தது முதல் இதுவரை இறந்துள்ள அமெரிக்க ராணுவ வீரர்களின் எண்ணிக்கை 1214. ஆனால், ஈராக் போரில் மரணமடைந்த அப்பாவி மக்களின் எண்ணிக்கை இதைப்போல ஐந்து மடங்கு.



* 1200 கோடி விலை கொண்ட, உலகின் மிகப் பெரிய ஏ380 ரக ஏர்பஸ் விமானத்தில் 555 பயணிகள் அமர்ந்து பயணம் செய்ய முடியும்.


* திகார் ஜெயிலில் இருக்கும் கைதிகளில், இந்திரா காந்தி தேசிய திறந்த வெளி பல்கலைக் கழகத்தில் பல்வேறு துறைகளிலுமாக படிப்பவர்கள் எண்ணிக்கை 26 ஆயிரத்து 640.

வித்தியாசமான கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரர்கள் ஜப்பானியர்கள். அப்படிப்பட்ட கண்டுபிடிப்புகளில் சில...

* பிரெட்டில், வெண்ணெய் தடவ, கத்தியைப் பயன்படுத்துவதைவிட, இப்படி ஒரு டியூப் வந்திருப்பது எவ்வளவு சௌகரியம்! அடிப்பக்கம் திருகத் திருக, மேல் முனையில் வெண்ணெய் வந்து கொண்டே இருக்கும்.

* மழையில், குடைபிடித்துக் கொண்டிருக்கும்போதுகூட, இடுப்புக்குக் கீழே நனைந்து விடுமே. அதைத் தடுக்க இப்படி ஒரு ஃபுல் கவரேஜ் குடை!

* கண்ணுக்குச் சொட்டு மருந்து போட்டுக் கொள்ள இப்படி ஒரு சௌகரியம்!



இங்கே இரண்டு அடுக்குகளாக தலா நான்கு பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒவ்வொன்றிலும் ஒரு எண் எழுதி வைக்கப்பட்டுள்ளது. முதல் அடுக்கில் இருக்கும் பெட்டிகளில் இடம் பெற்றுள்ள எண்களைக் கூட்டினால் 18 வரு

கார்?


கிறது. இரண்டாவது அடுக்கில் உள்ள எண்களின் கூட்டுத் தொகை 21 வருகிறதல்லவா? இப்போது ஏதாவது ஒரே ஒரு பெட்டியை மட்டும் மாற்றி வைத்து, இரண்டு அடுக்குகளிலுமே கூட்டுத் தொகை 18 வரும்படிச் செய்ய வேண்டும். எங்கே செய்து காட்டுங்கள் பார்க்கலாம்! தெரியவில்லையா? கடைசியில் விடை.

ஒரு வயதான பெண்மணி, நியூயார்க் நகரத்தின் பிரபலமான ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் காரை நிறுத்திவிட்டு, ஷாப்பிங் செய்யப் போனார். கைகளில் சாமான்களைத் தூக்கிக்



கொண்டு, திரும்பி வரும்போது, தன்னுடைய காரை யாரோ நான்கு பேர் சாவிபோட்டு கதவைத் திறப்பதைக் கவனித்தார்.

அவ்வளவுதான்! கையிலிருந்த சாமான்களை அப்படியே கீழே போட்டுவிட்டு, தனது கைப்பையில் இருந்து ஒரு துப்பாக்கியை எடுத்து, அவர்களை நோக்கி சுடத் தயாரானார். "காரை விட்டு இறங்கி, அப்படியே ஓடினால், தப்பிக்கலாம்.



இல்லை எனில் இந்த இடத்தில் நாலு பிணங்கள் விழும்" என்று உரத்த குரலில் எச்சரிக்கை செய்தார்.

அடுத்த விநாடியே, உயிர் தப்பிக்கும் ஆசையில், நான்கு இளைஞர்களும் ஓடிப்போனார்கள். முதிய பெண்மணி, காருக்குள்

தன் கையிலிருந்த சாமான்களை வைத்தார். கைப்பையிலிருந்து கார் சாவியை எடுத்து, கார் இஞ்சினை ஸ்டார்ட் செய்ய முயன்றார். சாவி துவாரத்தினுள்ளே, கார் சாவி சரியாகப் பொருந்தாமல், பிரச்னை பண்ணியது.

எவ்வளவோ முயற்சித்தும், காரை ஸ்டார்ட் செய்ய முடியவில்லை. எதேச்சையாக தலையைத் தூக்கியபோது, பக்கத்தில் ஒரு கார், மூதாட்டியின் கண்ணில் பட்டது. அட! அதுதான் அவருடைய கார். பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த வேறு ஒரு காரை தன் கார் என்று தவறாக நினைத்து துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்திவிட்டார் அந்த மூதாட்டி!

தனது முட்டாள் தனத்தை நொந்து கொண்டே, தன் சொந்த காரில், சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டு, நேரே அருகில் இருந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைந்தார். நடந்ததை அங்கிருந்த போலீஸ் அதிகாரியிடம் சொல்ல, அவருக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை.

தன் கையில் வைத்திருந்த ஒரு காகிதத்தை மூதாட்டியிடம் கொடுத்தார். ''ஐம்பது வயது மதிக்கத்தக்க, கண்ணாடி அணிந்த, சிவப்பு நிறமான ஒரு மூதாட்டி, கைத்துப்பாக்கியைக் காட்டி, தங்களை மிரட்டி, விரட்டி விட்டு, காரை பறித்துக் கொண்டதாக அதில் புகார் கூறப்பட்டிருந்தது.

போலீஸ் அதிகாரி அடுத்த அறையில் உட்கார்ந்திருந்த நான்கு பேரை அழைத்தார். அவர்களுக்கு மூதாட்டியைப் பார்த்த போது முகத்தில் லேசான அதிர்ச்சி. காரணம், ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் மூதாட்டி துப்பாக்கியைக் காட்டியபோது, அலறி அடித்துக் கொண்டு ஓடிய நான்கு பேர்தான் அவர்கள்.


விடை : இரண்டாம் அடுக்கில் உள்ள 9 எண் கொண்ட கட்டையை எடுத்து தலைகீழாகத் திருப்பி 6ஆக அதே இடத்தில் வைத்து விடுங்கள். இப்போது இரண்டு அடுக்குகளிலும் கூட்டுத் தொகை 18 வரும்.

தொகுப்பு :
எஸ். சந்திரமௌலி



செல்போன் என்றதும்
இவரது பெயரும்
நினைவில் வரும்.

கிளி பழத்தை அடைய வழிகாட்டுங்கள்!





பலாப் பையன்!

உமா தரணி

வயதான மரம்வெட்டியும் அவரது மனைவியும் ஆற்றோர கிராமம் ஒன்றில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இருவருக்கும் குழந்தைகளே இல்லை.

ஒருநாள், அவருடைய மனைவி துணிகளைத் துவைப்பதற்காக ஆற்றுக்குச் சென்றார்.

ஆற்றோட்டத்தின் நடுவே ஒரு பெரிய பலாப்பழம் மிதந்து வந்துகொண்டிருந்தது.

அதைப் பார்த்ததும் அவருக்கு ஒரே மகிழ்ச்சி. ஏனெனில் அவருக்கும் அவருடைய கணவருக்கும் பலாப்பழம் என்றால் ரொம்பப் பிடிக்கும். அதை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றார்.

அன்று மாலை வீட்டுக்குத் திரும்பிய விறகுவெட்டி பலாப் பழத்தைப் பார்த்ததும், கத்தியைத் தூக்கிக் கொண்டு வந்தார்.

அப்போது, ''என்னை வெட்டாதீங்க!'' என்று அந்தப் பழாப்பழத்துக்குள்ளிருந்து ஒரு குரல் கேட்டது. விறகு வெட்டியும் அவருடைய மனைவியும் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, பலாப்பழம் பிளந்து அதனுள்ளிருந்து ஒரு பையன் வெளியே குதித்தான்.

''குழந்தைகள் இல்லாமல்

நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள் என்பதற்காக கடவுள்தான் என்னை உங்களிடம் அனுப்பி வைத்தார்" என்றான் அந்தச் சிறுவன்.

இதைக் கேட்டதும் அந்தத் தம்பதியருக்கு ஏகப்பட்ட சந்தோஷம். தங்களுடைய பையனைக் கட்டிப் பிடித்து உச்சி முகர்ந்தார்கள். பலாப்பழத்திலிருந்து பிறந்ததால், அவனுக்குப் 'பலாப் பையன்' என்று பெயர் வைத்து மகிழ்ந்தார்கள்.

பலாப் பையனுக்குப் பதினைந்து வயதானபோது அதிர்ச்சி தரும் தகவல் ஒன்றைக் கேள்விப்பட்டான்.

அவர்கள் வசித்த ஊரிலிருந்து கொஞ்சம் தொலைவில் கடலுக்கு நடுவே 'பூதத் தீவு' இருந்தது. அங்கே ஏகப்பட்ட பூதங்கள் அராஜகம் நடத்தி வந்தன. அவ்வப்போது மனிதர்களைத் தூக்கிக் கொண்டு போய் விருந்து சமைத்துத் தின்பது என்று பூதங்கள் செய்த அட்டூழியங்கள் ஏராளம்!



எப்படியாவது அந்தப் பூதங்களை ஜெயித்தாக வேண்டும் என்று முடிவு செய்தான் பலாப் பையன்.

இதற்காக தன்னுடைய

தந்தையிடம் அனுமதி கேட்டான்.

அவருக்குத் தன்னுடைய மகனின் வீரத்தை நினைத்துப் பெருமைதான். என்றாலும் அந்தப் பூதங்கள் அவனை ஏதாவது செய்து விடுமோ என்று நினைத்துப் பயந்தார் அவர்.

"கவலைப்படாதீங்க அப்பா, எனக்கு ஒண்ணும் ஆகாது. நம் மக்களுக்காக நான் இதைச் செய்து முடிப்பேன்" என்று அவருக்கு ஆறுதல் சொல்லி விட்டுப் புறப்பட்டான் பலாப் பையன்.

அவனுக்கு ஒரு வாளும் கவச உடையும் கொடுத்தார். அவனுடைய அம்மா, வழியில் சாப்பிடுவதற்காக சுவையான இனிப்பு அப்பங்கள் செய்து கொடுத்தார்.



உலகின் முதல் இரும்புத் தொழிற்சாலையை இவரது தாத்தாதான் நிறுவினார்.

வழியில் ஒரு நாய் எதிர்ப்பட்டது. புதியவனான அவனைப் பார்த்துக் குரைத்த அந்த நாய், லேசாக உறுமியபடி அவனைக் கடிப்பதற்காகப் பாய்ந்தது.

ஆனால், பலாப் பையன் அந்த நாய்க்கு ஓர் அப்பம் கொடுத்து, அதைத் தனது தோழனாக்கிக் கொண்டான்.

"நீ எங்கே போறே?" அப்பத்தைத் தின்றபடி கேட்டது நாய்.

"நான் பூதத் தீவுக்குப் போய் அங்கே இருக்கிற பூதங்களோட சண்டை போட்டு ஜெயிக்கப் போறேன்" என்றான் பலாப் பையன்.

"நானும் உன்னோட வரட்டுமா?" என்றது நாய். "நாம சேர்ந்து சண்டை போட்டா, அந்தப் பூதங்களைச் சுலபமா ஜெயிச்சுடலாம்"

"சரி வா!" என்றான் பலாப் பையன்.

வழியில் அவர்கள் ஒரு குரங்கைப் பார்த்தார்கள். அந்தக் குரங்கு நாயுடன் சண்டை போட முயன்றது. ஆனால், அதற்கும் ஒரு அப்பத்தைக் கொடுத்து அதையும் தன்னுடைய படையில் சேர்த்துக் கொண்டான் பலாப் பையன்.

இதே போல ஒரு பஞ்சவர்ணக் கிளியும் அவர்கள் பாதையில் எதிர்ப்பட்டது. அதுவும் பலாப் பையனோடு தோழமையாகிவிட்டது.

பலாப் பையனின் தலைமையில் அவர்கள் எல்லோரும் கடற்கரையை அடைந்தார்கள். அங்கே, பலாப் பையன் ஒரு வலுவான படகு கட்டினான். அதில் எல்லோரும் ஏறிக் கொண்டு பூதத் தீவை நோக்கிச் சென்றார்கள்.

நீண்ட பயணத்துக்குப் பின், பூதத் தீவை அவர்கள் நெருங்கியபோது அங்கே ஒரு பிரம்மாண்டமான கோட்டை இருப்பதைப் பார்த்தார்கள். 'எப்படி இந்த ராட்சஸக் கோட்டைக்குள்ளே நுழைவது?' என்று கவலையோடு யோசித்தான் பலாப் பையன்.

''நானிருக்க பயமேன்?'' என்று சொன்ன பஞ்சவர்ணக் கிளி கோட்டைச் சுவர்களின் மேலாகப் பறந்து உள்ளே நுழைந்தது.

அங்கே ஏராளமான பூதங்கள் இருந்தன. சரேலென்று இறங்கிய கிளி பூதங்களுடைய தலையில் அழுத்தமாகக் கொத்த ஆரம்பித்தது.

'ஐயோ, வலிக்குதே' என்று அலறியபடி அந்தப் பூதங்கள் தலையைப் பிடித்துக் கொண்டு திசைக்கு ஒன்றாக ஓடின.

இப்படி அந்தப் பூதங்கள் எல்லாம் கிளியோடு சண்டை போட்டுக் கொண்டிருந்தபோது குரங்கு கோட்டைத் கதவைத் திறந்துவிட்டது.

அடுத்த பல மணி நேரங்களுக்கு ஆக்ரோஷமான சண்டை.



"என்னடா, 'மாடு'ன்னு எழுதச் சொன்னா... 'மோடு'ன்னு எழுதியிருக்கே?"


''மாட்டுக்கு ரெட்டைக் கொம்பு உண்டுன்னு எங்க வாத்தியார்தான் சொன்னாரு!"

- அனுராதா,
வத்தலகுண்டு

கடைசியில், பூதங்கள் அனைத்தும் தோற்றுப்போய் சரணடைந்தன. 'இனிமேல் யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்ய மாட்டோம்' என்று அவை சத்தியம் செய்ததும் பலாப் பையன் அந்தப் பூதங்களை மன்னித்துவிட்டான்.

பூதத் தீவில் ஏராளமான புதையல்கள் இருந்தன. அவற்றில் சிலவற்றை பலா பையனுக்குப் பரிசாகக் கொடுத்தன பூதங்கள். ஏகப்பட்ட செல்வத்தோடு படகில் ஏறித் திரும்பினான் பலாப் பையன்.

அதன்பிறகு பலாப் பையனும் அவனுடைய பெற்றோரும் தோழர்களும் அந்தக் கிராமத்திலேயே நன்கு வசதியோடும் ஆரோக்கியத்தோடும் நெடுங்காலம் வாழ்ந்தார்கள். ●



நடக்கும் இலை; நகரும் குச்சி!











இலையும் குச்சியும் நடந்து பார்த்திருக்கிறீர்களா? அப்படி பார்த்திருந்தால் அவை இலைப் பூச்சி, குச்சிப்பூச்சியாக இருந்திருக்கும். இந்தப் பெரிய பூச்சிகளை அசையும் போது தவிர, மற்ற நேரங்களில் கண்டுபிடிப்பது மிக மிக கஷ்டம். ஏன் என்றால் இவை நிஜ இலைகள், குச்சிகளைப் போன்று வடிவம் மற்றும் நிறங்களில் காணப்படுகின்றன. எதிரிகள் கண்ணுக்கு எளிதாகப் பட்டுவிடாதபடி இயற்கை அளித்துள்ள தகவமைப்பே இந்த உருவத்துக்குக் காரணம். குச்சிப் பூச்சி 40 செ.மீ. நீளம் வரை கூட இருக்கும்!

ஒரு ரூபாய்!

மூன்று நண்பர்கள். மூவரும் சோம்பேறிகள். எந்த வேலையும் செய்யாமல் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் மூவரும் நடந்து சென்று கொண்டிருந்தனர். நல்ல பசி! வழியில் ஒரு ரூபாய் கிடந்தது. அதைக் குனிந்து எடுக்க சோம்பேறித்தனம்.



விவசாயி ஒருவர் தனது வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்து, களத்தில் குவித்து வைத்திருந்தார். ஓரிரு குருவிகள் கதிரில் இருந்த நெல்மணிகளைக் கொத்தித் தின்று கொண்டிருந்தன. அவ்வழியே வந்த மகான் ஒருவர் அந்த விவசாயியிடம், ''நெல்மணிகளைக் குருவி தின்கிறதே... அதை விரட்டக் கூடாதா?" என்று கேட்டார். அதற்கு அந்த விவசாயி, ''ஒரு குருவிதானே தின்கிறது. எவ்வளவு தின்று விடும்?'' என்று அலட்சியமாகப் பதிலளித்தார்.

மகான் மறுநாள் அவ்வழியே வந்தார். களத்திலிருந்த அந்த விவசாயி கதறி அழுது கொண்டிருப்ப

எங்கே நெல்மணிகள்?



தைப் பார்த்து, விசாரித்தார். விவசாயி, ''ஐயா, நீங்கள் வந்து சென்ற பிறகு கூட்டமாக வந்த குருவிகள், களத்திலிருந்த மொத்த நெல்மணிகளையும் தின்றுவிட்டன" எனக் கூறி அழுதார்.

- ஆ.கீதா,
வேலூர்



'அவன் எடுக்கட்டும்' என்று ஒவ்வொருவரும் பேசாமல் இருந்துவிட்டனர். அந்த நாணயத்தை ஒருவர் எடுத்துச் சென்றார். அப்போது அந்த வழியே ஒரு வாழைப்பழ வியாபாரி 'ரூபாய்க்கு மூன்று பழம்' என்று கூவிக் கொண்டு வந்தார். 'அடடா! அந்த ரூபாயை எடுத்திருந்தால் பசியாவது ஆறியிருக்கலாமே' என்று நினைத்தனர்.

சிறிய,பெரிய உருவங்கள்!

யானை ஒன்று காட்டுக்குள் ஜாலியாகத் திரிந்து கொண்டிருந்தது. அப்போது எறும்புப் படை ஒன்று சாரி சாரியாகப் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்து, 'எவ்வளவு சின்னப் பிராணி' என்று நினைத்தது. ஒரு காலால் எறும்புகளை மிதித்து விட்டு கர்வத்துடன் சென்றது.

திடீரென்று காதுக்குள் 'சுரீர்' என்று வலித்து. முறம் போன்ற தன் காதுகளை வேகமாக ஆட்டி ஆட்டிப் பார்த்தது. வலி குறையவே யில்லை. காதுக்குள்ளிருந்து பேச்சுக்குரல் கேட்டது. ''நான்தான் எறும்பு பேசுறேன், ரொம்ப ரொம்பச் சின்னவன். இவ்வளவு பெரிய உன்னையும் அலற வைக்க முடியும்'' என்றது. யானைக்குப் புரிந்தது.

- ஆர்.ராஜலட்சுமி,
கரூர்



டாக்டருக்கு நன்றி!

கற்பனை வளத்தைக் குறைக்கிறது டீ.வி. என்ற பகுதியைப் படித்தவுடன் எங்கள் வீட்டு கேபிளையே எடுத்து விட்டோம். பிரமிட் கேமை நான் இதுவரை 14 தடவை விளையாடி விட்டேன். ஏற்படுத்திவிட்டது. பிறர் மனம் நோகாமல் பாஸிட்டிவ் ஆகப் பேசும் விதத்தை அக்பரின் கனவு படக் கதையில் பீர்பால் மூலம் உணர முடிந்தது. தோல்வியடைந்த மாணவனுக்கு டாக்டரின் அறிவுரை அற்புதம்! ஃபிரான்ஸ் தேசத்தைப் பற்றிய பல்வேறு செய்திகளை அறிந்து கொண்டேன்.

- சு. இந்துமதி, நெய்வேலி



மணிகளின் வித்தியாசமான படங்களும் தகவல்களும் நன்று. டாக்டரின் அறிவுரை அருமை! தேர்ச்சி பெறாத மாணவர்கள் தப்பான முடிவெடுக்க வேண்டாம் என்று சொன்னது ஆரோக்கியமாக இருந்தது. மாணவர்கள் இதைப் படித்தால் மனதில் தெம்பு பிறக்கும்.

- எம்.சபரீஷ் விஜய், தஞ்சாவூர்



வெங்காயத்தின் பெருமை அசத்தலோ அசத்தல்!

- கோ. இராக விஜயா, நெய்வேலி

'போலார் எக்ஸ்பிரஸ்' அட்டைப்படமும் கவர் ஸ்டோரியும் அந்தத் திரைப்படத்தினைக் காண வேண்டும் என்ற ஆவலை

செய்தி நேரம், பாப்கார்ன் பிட்ஸ், நெட் பிட்ஸ் மூன்றும் முத்துச்சரம். ஜக்கு பதில்கள் முத்தாரம்.

- நெ. பிரஜோற்பத்திகலை, எட்டாம் வகுப்பு, மங்களம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புவனகிரி

நிழல் எவ்வளவு நீளம்?

I. குமார் 500 ரூபாய் முதலீடு செய்தால் ஆறு மாதங்களில் இரட்டிப்பாகி விடும் என்றான் முனியம்மா பாட்டியிடம். பாட்டியும் 500 ரூபாயைக் கொடுத்து விட்டு ஊருக்குச் சென்று விட்டார். பிறகு 10 ஆண்டுகள் கழித்து திரும்பி வந்து பணத்தைக் கேட்கும்போது, குமார் பணத்தைக் கொடுத்தான். பணத்தைப் பார்த்த பாட்டி மயங்கி விழுந்தாள். ஏன்?

- ஆ. கீதா,
அகரம்

II. ஒரு விவசாயி கோழி, ஆடு, மாடுகளுக்குத் தீவனம் வாங்கினான். கோழி உணவு கிலோ ரூ.5, ஆட்டுக்குத் தழை கிலோ 50 பைசா. மாடுகளுக்குப் புண்ணாக்கு கிலோ ரூ.3. மொத்தம் நூறு கிலோவுக்கு ரூ.100 செலவாயிற்று. கோழி உணவு எவ்வளவு கிலோ? மாட்டுத் தீவனம் எவ்வளவு கிலோ? ஆட்டுக்குத் தழை எத்தனை கிலோ?

- ச.அழகுவேல்,
கன்னிவாடி

III. 5 அடி உயரமுள்ள விளக்குக் கம்பம் நிழலின் நீளம் 6 அடி என்றால், 40 அடி நிழல் தரும் ஒரு மரத்தின் நீளம் என்ன?

- என். ஜரீனா பானு,
திருப்பட்டினம்



IV. இந்த ஒவ்வொரு வட்டத்

திலும் உள்ள எண்கள் ஒவ்வொரு பழமொழியைக் குறிப்பவை. கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

16	1-1	8-16	1-2
10	1000	100	5-50
6-100	1000-1000		10½

- எஸ். மங்கையர்க்கரசி, சென்னை

V. 1 2 3 4 5 6 7 8 9 இதில் ஏதோ ஓர் எண்ணை எடுத்துவிட்டு 9ஆல் பெருக்கினால் 11111111 விடை கிடைக்கும். எடுத்த எண்ணை விட்டு விட்டு அதே போல் 9ன் மடங்கால் (உதாரணம் 9, 18, 27...81) இயல் எண்களைப் பெருக்கினால் ஆச்சரியம் அளிக்கும் வகையில் கிடைக்கும். விடையும் எந்த எண்ணை எடுக்க வேண்டும் என்பதையும் கண்டுபிடிக்கவும்.

- ந. பூபதி ராஜா, ஒன்பதாம் வகுப்பு, சிவபாக்கியம் முத்துசாமி மெட்ரிக் பள்ளி, மாதேசம்பாளையம்


VI. 1. இந்தியாவில் ரூபாய் நோட்டுகள் அச்சிடப்படும் இடம் ____________

2. கிரேக்க தத்துவஞானி சாக்ரடீஸ் விஷம் வைத்துக் கொல்லப்பட்டார் என்பது தெரியும். அந்த விஷத்தின் பெயர் ____________

3. மிகப் பெரிய தேசியக் கொடி உள்ள நாடு ____________

4. அண்டார்டிக் வட்டத்தை முதன் முதலில் கடந்தவர் ____________

- த.மணிக்கலா, ஆதனூர்



VII. ராஜாவிற்கு அவசரமாக நூறு ரூபாய் தேவைப்பட்டதால் தன் நண்பர்கள் ஐவரிடம் கடன் கேட்டான்.

அந்த ஐவரில் ஒருவன், "நீ முதலாமவனிடம் எவ்வளவு தொகை கேட்கிறாயோ அவ்வளவு தருவான். இரண்டாமவன் அவனை விட ஆறு ரூபாய் அதிகம் தருவான். அடுத்தவன் இரண்டாமவனைவிட ஆறு ரூபாய் அதிகம் தருவான். இப்படியாக நான்காமவனும் ஐந்தாமவனும் அடுத்தவனைவிட ஆறு ரூபாய் அதிகம் தருவார்கள். எல்லாத் தொகையும் சேர்ந்தால் சரியாக நூறு ரூபாய் வர வேண்டும். அப்படி வந்தால் அந்தப் பணத்தை வைத்துக் கொள்ளலாம்" என்றனர். அறிவு நிறைந்த ராஜா முதலாமவனிடம் எவ்வளவு கேட்டிருப்பான்?

- மு. ராஜேந்திரன், க. தருமத்துப்பட்டி

விடை 95ஆம் பக்கம்



கோகுலம் சந்தா செலுத்துங்கள்; கதை கேளுங்கள்!

எப்படி பெறலாம்?

* புதிதாக சந்தா செலுத்தலாம் ☐ * ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐ * உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்: .... நண்பரின் பெயர்: ....

முகவரி: .... முகவரி: ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032**

மர்மப் புத்தகம்!

''ராஜு, ராதிகா இனி நன்றாகப் படிக்க வேண்டும். பரீட்சை முடிந்த பிறகு உடனே அம்மாவுடன் கிளம்பி, சென்னையில் அத்தை வீட்டிற்கு வந்திடுங்க. அங்கே என் ஆபீஸ் நண்பர்கள், கெய்ரோ பயணத்துக்கு ஏற்பாடு செய்வார்கள். இனி இந்த ஒரு மாதம் முழுவதும் மிகுந்த பொறுப்புடன் இருக்க வேண்டும். ஜாக்கிரதையாக இருங்கள்'' என்று சங்கரன் கூறிவிட்டுக் கிளம்பினார்.

மறுநாளிலிருந்து பள்ளித் தேர்வுகள். முதல் பரீட்சை, சிறிது தூரம் சென்றவுடன், ''அந்தப் பெரியவர் நம்மை ஒரு காரில் பின் தொடர்கிறார்'' என்று ராதிகா கவலையுடன் கூறினாள். ''இப்பொழுது ஒண்ணும் செய்ய வேண்டாம். வீடு திரும்பும்பொழுது பார்த்துக் கொள்ளலாம்'' என்றான் ராஜு.

வீடு திரும்பும்பொழுது அவர் பின் தொடரவில்லை. ''பயந்து விட்டார்'' என்று ராஜு சிரித்தான். ''இல்லை, ராஜு கடைசிப் பரீட்சை அன்று நம்மைக் கட்டாயமாகப் பின் தொடர்வார்னு தோணுது'' என்றாள் ராதிகா. ''அப்படி அவர் பின்தொடர்ந்தால் எப்படி சமாளிக்கறேன்னு பார்'' என்று ராஜு தைரியம் கூறினான்.

கடைசிப் பரீட்சையன்று ராதிகா கூறியது போலவே ஒரு காரில் அக்பர் இவர்களைப் பின் தொடர ஆரம்பித்தார். ''ராஜு, வா, வேகமாகப் போகலாம்'' என்றாள். ''வேண்டாம். நான் சொல்வதைப்




காந்தலக்ஷ்மி சந்திரமௌளி

போலச் செய்தால், நாம் தப்புவது மட்டுமல்ல, அவரை மாட்டியும் விடலாம் தெரியுமா?'' என்றான் ராஜு.

''இந்த ரோடில் இடதுபுறம் திரும்பத் தடை உள்ளது. அதனால் வலது புறம் திரும்பலாம் வா'' என்றாள் ராதிகா. ''இதோ பார், இந்த ரோடில் நேராகச் செல்ல குறியீடு உள்ளது. இங்கு சிறிது தூரம் போகலாம்'' என்று சைக்கிளில் மாட்டியுள்ள கண்ணாடியில் பார்த்தான்.

''இன்னும் நம்மைப் பின் தொடர்கிறார் அந்த அக்பர்.



சீக்கிரமாக வா. இந்தத் தெருவில் திரும்பிவிடலாம். அந்தப் பலகையைப் பார்த்தாயா? இங்கு மோட்டார் வாகனங்கள் செல்லத் தடை உள்ளது. அக்பர் என்ன செய்கிறார் என்று பார்க்கலாம் வா'' சைக்கிளைத் திருப்பினான் ராஜு.

அக்பர் கூப்பிடுவதைக் கவனிக்காமல் வேகமாக ராதிகாவும் ராஜுவும் சென்றனர். சிறிது தூரம் சென்றதும் ''இப்பொழுது பார், அக்பர் எப்படி மாட்டிக் கொண்டு முழிக்கிறார்?'' என்றான் ராஜு.

ராதிகா பார்த்தபொழுது ஒரு சாலைப் போக்குவரத்து அதிகாரி அக்பரைப் பிடித்து ''இந்தத் தெருவில் மோட்டார் வாகனம் போகத் தடையுள்ளது. படித்தவர், பெரியவர் நீங்களே அதை மீறினால் எப்படி?'' என்று கடுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார். ''கட்டுங்கள் அபராதத்தை அல்லது நடங்கள் ஸ்டேஷனுக்கு'' என்று போலீஸ் அதிகாரி கூறினார்.

''அப்பாடா தப்பித்தோம்! உனக்கு எப்படி ராஜு சாலை விதிகளைப் பற்றி தெரிந்தது?'' என்று ராதிகா கேட்டாள். ''புத்தகக் கண்காட்சியில் 'சிறுவர் சிறுமியருக்கான சாலை விதிப்பாடல்கள்' எனும் புத்தகத்தை வாங்கி அகிலா எனக்குக் கொடுத்தாள். அதைப் படித்து எல்லாம் தெரிந்து கொண்டேன்'' என்றான் ராஜு.

இரண்டு நாட்களில் கோவை நகரத்தை விட்டு சென்னைக்குக் கிளம்பினார்கள். ''நண்பர்களை விட்டுப் பிரிவது ரொம்பக் கஷ்டமாக இருக்கும்மா'' என்று ராஜுவும் ராதிகாவும் வருத்தப்பட்டனர். ''கவலைப்படாதே, நீ அவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதலாம்'' என்றார் விமலா.

அகிலாவிற்கும் தேர்வுகள் முடிந்து, மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தாள். ''சுனாமி தாக்கியதால் கடற்கரையோரம் நிறைய சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அதைப் பார்க்கலாமா?'' ராதிகா ஆவலுடன் கேட்டாள்.

''மகாபலிபுரத்தில் சுனாமிக்குப் பிறகு, புதைந்திருந்த நிறைய சிலைகள் கிடைத்துள்ளன என்று செய்தித்தாள்களில் படித்தேன். அதைப் பார்க்கலாமா?'' என்று ராஜு கேட்டான். ''அங்கெல்லாம் தனியாகப் போகக் கூடாது. இங்கு அருகில் இருக்கும் 'பீச்சு'க்குச் சென்று வாருங்கள்'' என்று விமலா கூறினார்.



ஏர் இந்தியா, இண்டியன் ஏர்லைன்ஸ் இரண்டுக்கும் தலைவராக விளங்கியவர்.

அன்று மாலை மூன்று பேரும் கடற்கரை மணலில் நின்று கடற்கரையைப் பார்த்தனர். "இவ்வளவு சாதுவாக இருக்கும் இந்தக் கடலா அத்தனை உயிர்களைப் பலி வாங்கியது? நம்பவே முடியவில்லை" என்று ராதிகா வருத்தத்துடன் கூறினாள்.

"பசிபிக் கடலைச் சுற்றியுள்ள நாடுகள் ஒன்றுகூடி சுனாமி தாக்குதலை முன்னரே அறிவிக்கும் கருவிகள் வைத்து, தம் நாட்டை பேரழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்கின்றன. அது போல நாமும் செய்ய வேண்டும்" - என்றான் ராஜு.

"ஐயோ, ராஜு! அந்த அக்பர் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். வாருங்கள் ஓடி விடலாம்" என்று ராதிகா பயந்தபடி கூறினாள். அதற்குள் அக்பர் அருகில் வந்து ராஜுவின் கைகளைப் பிடித்து விட்டார். "என்ன ராஜு இது, என்னைக் கண்டாலே ஓடுகிறீர்களே?" என்றார்.

"பெரியவரே, என் புத்தகப் பையைத் திருடிவிட்டு நல்லவர் போல வேஷம் போடுகிறீரா?" என்று ராதிகா கோபமாகக் கேட்டாள். "ராதிகா, கவனக் குறைவால் உன் பையைத் தூக்கிக் கொண்டு வந்து விட்டேன்: இதோ இப்பொழுதே உன் பையைத் தந்து விடுகிறேன். என் காரில்தான் பை உள்ளது. மூவரும் வாருங்கள்" என்று அக்பர் அழைப்பு விடுத்தார்.

உடனே ராஜு "ஐயா, உங்களுக்குப் பின்னால் ஒரு குதிரை தலை தெறிக்க ஓடி வருகிறது. நகருங்கள்" என்று சத்தமாகக் கூறினான். அக்பர் திரும்புவதற்குள் மூவரும் வெகு வேகமாக ஓடி கடற்கரை சாலைக்கு வந்து விட்டனர். அக்பரால் இவர்களின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை.


"அப்பாடா, தப்பித்து விட்டோம். இதைப் பற்றி அம்மாவிடம் எதுவும் சொல்ல வேண்டாம். இனி இரண்டே நாட்களில் நாம் எகிப்திற்குப் பயணம் செய்ய வேண்டும்" என்றான் ராஜு.

"ம்... எனக்குப் பயமாக இருக்கிறது. இனி எங்கும் வெளியில் செல்ல வேண்டாம். எகிப்திற்குச் சென்று விட்டால் கவலையே இல்லை" என்றாள் அகிலா.

"இல்லை அகிலா, எகிப்தில் தான் ஏதோ ஆபத்து வரப் போகிறதுன்னு எனக்குத் தோன்றுகிறது" என்று ராதிகா கவலையுடன் சொன்னாள்.

ராஜுவும் அகிலாவும் திகைத்து, ராதிகாவைப் பார்த்தனர்.

(தொடரும்)



"எங்க வீட்டிலே 'பற்பசை' உபயோகிக்கறதே இல்லை."

"ஏன்?"

"அது 'சொத்தை' எல்லாம் அழிக்கிறதாம்."

- டி. அருண்குமார்,
பத்தாம் வகுப்பு, அழகிரி
சுரேஷ் அரசு உயர்நிலைப் பள்ளி,
சிறுமுகை



ஏன் மணலில் சைக்கிள் ஓட்ட முடிவதில்லை?

● பி. பாரதி, ஆரணி

? பூமியிலிருந்து செவ்வாய் கிரகம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது ஜக்கு?

மூன்றாவது கிரகம் பூமி, நான்காவது கிரகம் செவ்வாய். பூமியும் செவ்வாயும் நெருங்கி வரும்போது 5,45,00,000 கி.மீட்டர்கள். தூரத்தில் இருக்கும்போது 40,13,00,000 கி.மீட்டர்கள் தூரம் பாரதி.

● என். சுரேஷ்குமார், விருதுநகர்

? எங்கள் ஊரில் எங்கிருந்தோ ஒரு குரங்கு வந்து அட்டகாசம் செய்து கொண்டிருக்கிறது. கோபத்தில் கல்லெடுத்து வீசினாலும் அது பயப்படுவதில்லை. என்ன செய்யலாம்?

உங்கள் பகுதி அரசாங்க அலுவலர்களுக்குத் தகவல் தெரிவித்தால் குரங்கை (என் சகோதரனை) அழைத்துச் சென்றுவிடுவார்கள். நீங்கள் கல்லால் அடித்துக் காயப் படுத்தாதீங்க சுரேஷ்.

● ஜி. அருள்ராணி, நெல்லையப்பபுரம்

? சமீபத்தில் உன்னை சந்தோஷப்பட வைத்த நிகழ்ச்சி என்ன ஜக்கு?

நம் ஜனாதிபதி அப்துல் கலாம் பல நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். அதில் ஸ்விட்சர்லாந்துக்கு அவர் சென்ற நாளை அந்நாட்டு அரசு 'அறிவியல் தினம்' ஆக சிறப்பித்துள்ளது. இதுதான் லேட்டஸ்ட் பெருமிதம் அருள்ராணி.

● பூ.கு.கபிலன், திருப்பூர்

? ஜக்கு, நாம் வாழும் பூமியின் வயது என்ன?

நமது பூமி பிறந்து 460 கோடி ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் 550 கோடி ஆண்டுகள் வரை பூமி சுழன்று கொண்



● பூமிக்கு அருகில்



* பூமி



* செவ்வாய்

டிருக்கும். மனிதன் தோன்றி வெறும் 11.5 கோடி ஆண்டுகள்தான் ஆகின்றன.

● **வே. சுபஸ்ரீ, நல்லூர்**

? எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம். கிரிக்கெட்டில் தூஸ்ரா பந்து என்றால் என்ன?

இன் ஸ்விங், அவுட் ஸ்விங், கூக்லி போல 'தூஸ்ரா' என்பது ஆஃப் ஸ்பின் பந்து வீச்சில் ஒரு வகை. இது வீசும்பொழுது 15 டிகிரிக்கும் அதிகமாக தோள் பட்டையைச் சுழற்ற வேண்டியுள்ளதால் இது சர்ச்சைக்குரிய பந்து வீச்சாக கருதப்படுகிறது. 'தூஸ்ரா' சுழற்சி மூலம் எளிதாக விக்கெட் எடுக்க முடியும் என்பது பந்து வீச்சாளர்களின் நம்பிக்கை.



* பூமிக்குத் தொலைவில்

● **கே. மகேஸ்வரன், மன்னார்குடி**

? மணலில் சைக்கிள் ஓட்ட முடியலையே, ஏன் ஜக்கு?

மணலில் சைக்கிள் சக்கரம் புதைவதால் ஓட்ட முடிவதில்லை. சைக்கிளின் எடையால் மணல் பக்கவாட்டில் விலகிக் கொள்ள சக்கரம் புதைகிறது. சக்கரத்தைச் சுற்றுவதற்குக் கொடுக்கும் ஆற்றலானது மணலை விலக்குவதற்குச் செலவாகிவிடுகிறது. கெட்டித் தரையில் சைக்கிளின் கனத்திற்கு எதிர்வினை கிடைக்கிறது. இதனால் சைக்கிளை எளிதாக ஓட்ட முடிகிறது மகேஸ்.



* தூஸ்ரா பந்து வீச்சு

ஆண் நண்பர்கள்

அன்புள்ள

டாக்டருக்கு,

நான் கோ-எஜுகேஷன் பள்ளியில் பத்தாம் வகுப்பில் படிக்கிறேன். எனக்கு என் வகுப்பில் சில ஆண் நண்பர்கள் இருக்கிறார்கள். என்னிடம் அவர்கள் நன்றாகப் பழகுவார்கள். என்னைச் சந்திக்க அவர்கள் என் வீட்டிற்கும் வருவார்கள். இது என் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் வீட்டிற்கு வந்தால் திட்டி அனுப்பி விடுகிறார். இது என் மனதிற்குச் சங்கடமாக உள்ளது. எனக்கு என் நண்பர்களும் வேண்டும். அம்மாவையும் சமாதானப்படுத்த வேண்டும். இதற்கு ஓர் ஆலோசனை கூறுங்கள், டாக்டர்.

- கே.ஆர்த்தி,

மேட்டுப்பாளையம்

இருபாலரும் படிக்கும் பள்ளியில் ஏற்படும் நட்பில் அன்பும் இருக்கும்; ஆபத்தும் இருக்கும். அதிலும் ஆண் - பெண் நட்பில் மிகுந்த கவனம் தேவை. நண்பர்களிடம் உண்மையான அன்பு இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொண்டு பழக வேண்டும். அவர்களிடம் நல்ல குணங்களும் நடத்தைகளும் இருக்க வேண்டியது முக்கியம். ஒருவருக்கு ஒருவர் நன்கு புரிந்து கொண்டு, பேச்சிலும் நடத்தையிலும் ஓர் எல்லை வகுத்துக் கொண்டு பழகுவது நல்லது.

உன் நண்பர்களின் பேச்சு, பழகும்முறை போன்றவற்றிலிருந்து அவர்களுடைய குணங்களை நீ தெரிந்து கொள்ளலாம். அவற்றில் உனக்கு திருப்தி இருந்தால் உன் நட்பைத் தொடரலாம். குன்றிமணி அளவு சந்தேகமிருந்தாலும் உன் நட்பைத் தொடர்வதற்கு நீ யோசிக்க வேண்டும். காரணம், உன்னைவிட அனுபவத்தில் மூத்தவர் உன் அம்மா. உன் நட்பிலும் எதிர்கால நலனிலும் பெரிதும் அக்கறை உள்ளவரும் அவரே! ஆதலால் உன் நண்பர்களைப் பற்றி உன்னைவிட நன்கு விசாரித்துத் தெரிந்து வைத்திருப்பார் அவர்.



டாக்டர் கு.கணேசன்

இருக்கக்கூடாதா?

உங்கள் நட்பில் அல்லது உன் நண்பர்கள் பழகும் விதத்தில் ஏதேனும் நெருடல் இருக்கும் போது உன் அம்மா அவர்களைத் திட்டியிருக்கலாம்.

தவிர, பள்ளிப்பருவத்தில் கிடைக்கின்ற ஆண், பெண் பார்வைப் பரிமாற்றங்களையே காதல் என உருவகப்படுத்தித் தூபம் போடுகின்ற திரைப்படங்களையும் தொலைக்காட்சிகளையும் பார்த்துப் பார்த்து, சிந்தனை பிறழ்கின்ற, திசை மாறுகின்ற மாணவ மாணவியரையும் நடைமுறையில் காண்கிறோம். மேலும் லட்சிய விதை பயிர் செய்யப்பட வேண்டிய இப்பருவத்தில் காதல் கிருமி நுழைந்து விட்டால் லட்சியத்தை எட்டுவதில் வழி தவறிவிடலாம் என்ற அச்ச உணர்வின் காரணமாக உன் அம்மா எச்சரித்திருக்கலாம்.

ஆகையால் உன் அம்மாவிடம் சிநேகத்துடன் உன் நட்பைப் பற்றியும் உன் நண்பர்களைப் பற்றியும் பேசு. அம்மா உன் நண்பர்களைப் பற்றிய கணிப்பைக் கூறிவிடுவார்கள். உங்கள் நட்பின் சாதக, பாதகங்களை உனக்குப் புரிய வைப்பார்கள். உங்கள் நட்பினால் உன் கல்விப் பயணத்திலும் பிற்கால நலனிலும் கேடு வராத அளவிற்கு நல்ல வழி காட்டுவார்கள்.



இது உன் அம்மாவுக்கு : பள்ளிப் பருவ ஆண் - பெண் நட்பைக் காப்பது கண்ணாடியைக் கையாள்வது மாதிரி. சிறிது கவனம் சிதறினாலும் கையைக் கிழித்துவிடும். உங்கள் பெண்ணிடம் அளவு கடந்த கண்டிப்பும் வேண்டாம்; அளவில்லாத நம்பிக்கையும் வேண்டாம். தோழமை உணர்வுடன் பேசி, உங்கள் பெண்ணின் தேவையைப் புரிந்து, தெளிவான ஆலோசனைகளைக் கூறி அவர்களின் நட்பைக் காப்பதும் மறுப்பதும் உங்கள் கடமை. ●


அம்மாவைத் தேடி...
9
கதை : வாண்டுமாமா படம் : மகேஸ்
அகிலா, உன் அம்மாவை முதலில் கவனி.
அகிலா வேகமாக பஸ்ஸில் ஏறினாள்.
இளங்கோவனின் அலுவலகத்தில்-
வசந்தாவோட பொண்ணா? உட்கார் இதோ வரேன்.
பத்திரிகைகளுக்கு அனுப்பிய செய்தி நகல். அம்மா கடத்தலுக்கு முன்பே தயாரிக்கப்பட்டிருப்பதை தேதி உறுதி செய்கிறது.
அப்போது -
நம் திட்டம் நிறைவேறப் போகுது.
பெரிய புதையல் காத்திட் டிருக்கு!


அகிலாவும் சொத்தும் என் கஸ்டடியில்...
தண்டபாணி எப்படி சம்பந் தப்பட்டார்?
அவன்தான் இந்தப் புதையலைக் காட்டினவன்!
பாஸ், கதவைத் திறக் கறேன்.
ஐயோ!
நல்ல வேளை தப்பித்தேன்!
ஐயோ! இந்திரா வர்றாங்க! அந் தப் பக்கமா ஓடிடலாம்!


அகிலா, இளங்கோ சார் வந்திருப்பாரே?
கையில என்ன?
லெட்டர் ஹெட். நாயை மீட்கணும்.
அகிலா கடிதத்துடன் நாய் காப்பகம் சென்றாள்.
சரி, நாயைத் தரேன்.
விடுதலை பெற்ற லட்டு ஓடியது.
லட்டு, இங்கே வா...
லட்டு லட்சியம் செய்யாமல் ஓடியது.


வசந்தாவின் கைக் குட்டையை முகர்ந்ததிலிருந்து லட்டுவின் மூளையில் மின் அதிர்வு.
அந்த நாய்க் குட்டி அகிலாவோடதுதானே? பின் தொடரலாம்.
பழைய கட்டடத்து பக்கம் எங்கே போகுது?
உள்ளே போய் பார்க்கலாம்!
ஐயோ! இப்படி ஒரு பெண்ணைக் கட்டிப் போட்டிருக் காங்களே!
தண்டபாணி, இளங்கோ, இந்திராவுக்கு விலங்கு மாட்டப்பட, அகிலா அம்மாவைக் கட்டிக் கொண்டாள்.
நிறைந்தது.



காதைத் திருகினால் கதை சொல்வான்!

I. 1. காது ஒன்றைக் காணோம். வாய் மட்டும் நீளம். கிழிந்த வாயினை மூடுவான். தப்பிவிட்டால் காணாமல் போயிடுவான் - அவன் யார்?

2. நிறுத்தினால் நிற்க மாட்டான், படுப்பான். ஆனால் தூங்க மாட்டான். - இவன் யார்?

3. குண்டரிசி உடம்பில் வண்ண வண்ண சேலைகட்டி வயல்களைச் சுற்றி வருவாள்; அழகானவள் - அவள் யார்?

- மா.ஷண்முகராஜா, கோவை

II. 1. ஒளி தந்த உத்தமன் உருக்குலைவான் அதனாலே - அது என்ன?

2. ஒரு மீனுக்கு முப்பத்திரண்டு காவல்காரர்கள் - அவை என்ன?

3. கல்லால் ஆன குதிரைக்கு மரத்தாலே மூக்கணாங் கயிறு - அது என்ன?

- ச.அழகுவேல், திண்டுக்கல்

III. கடிக்கத் தெரியாதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள் - அவன் யார்?

2. காதைத் திருகினால் கதை சொல்லுவான்- அவன் யார்?

3. செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே - அது என்ன?

- வே.ஐஸ்வர்யா, நல்லூர்

IV. 1. எருக்க இலை பழுப்பதேன்; எருமைக் கன்று துடிப்பதேன்?

2. குடிக்கவும் முடியாத நீர்; குளிக்கவும் முடியாத நீர்! - அது எந்த நீர்?

3. வாயிருந்தும் பேசாது, காலிருந்தும் நடக்காது - அது என்ன?

- நமுனை பா.சுவாமிநாதன், சென்னை

விடைகள் : I. 1. தையல் ஊசி, 2. தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை, 3. வண்ணத்துப்பூச்சி **II.** 1. மெழுகுவர்த்தி, 2. நாக்கு, பற்கள், 3. மாவு அரைக்கும் திருகை **III.** 1. சீப்பு, 2. வானொலி, 3. தொலைபேசி **IV.** 1. பாலற்று, 2. கண்ணீர், 3. பொம்மை

ஓவியப் போட்டி முடிவு

ஜூன் இதழில் 'முயல்கள்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்து இருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...



முதல் பரிசு : **எஸ்.அனிலா பானு,**
ஒன்பதாம் வகுப்பு, பொன்ஜெஸ்லி பப்ளிக் மெட்ரிக் பள்ளி, நாகர்கோவில்

முயல்கள்



இரண்டாம் பரிசு :
சு.புவனேஸ்வரி, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை



மூன்றாம் பரிசு :
ஜ. செல்வி,
பாண்டிச்சேரி

ஆறுதல் பரிசு :
எஸ்.ராஜலக்ஷ்மி,
பத்தாம் வகுப்பு, சங்கவை மகளிர் மே.நி. பள்ளி, திருக்கோவிலூர்



ஆறுதல் பரிசு : **அ.பவித்ர செல்வி**
ஏழாம் வகுப்பு, டி.எஸ். சாரதா வித்யாலயா பெண்கள் மே.நி.பள்ளி, கோபி



கோடை விடுமுறைப் போட்டி - 1 முடிவு

மே இதழில் அறிவித்த போட்டி சுலபமாக இருந்தும் நிறையப் பேர் தவறாக பதில் அளித்திருந்தனர். சரியான விடையளித்தவர்களில் 10 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



சரியான விடை:

1.காந்தி, 2.சாப்ளின், 3.ஜார்ஜ் புஷ், 4.ஸ்டாலின், 5.ஐன்ஸ்டீன், 6.பில்கேட்ஸ்

ரூ.20/- பரிசு பெறுவோர்:

1. கைலாஷ், கும்பகோணம், 2. எம்.ராம்நாதன், சென்னை 3. வி.சுஜீத்ரா, சென்னை, 4. நா.வள்ளி உமா, மதுரை, 5. அ.மணி லட்சுமணன், பாண்டிச்சேரி, 6. பே.ஆறுமுகம், மதுரை, 7. சி. ராமகிருஷ்ணா, தென்னூர், 8. பா. பிரகதீஸ்வரன், புனித மேரி மெட்ரிக் பள்ளி, குத்தாலம், 9. ஏ.எஸ். அருண்குமார், பவானி, 10. கில்பர்ட் ஜோபர், பாண்டிச்சேரி.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

மே இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். சரியான விடை அளித்தவர்களில் இருந்து 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை :

I. 1. விளாடி மிர் இல்லிச் உல்யானவ் லெனின் 2. அலெக்ஸாண்டர் 3. ரஷ்யா 4. ஆம் 5. 54ஆம் வயதில்

II. 1. யாக், 2. பிளாட்டி பஸ் 3. ஆன்டிலோப் 4. ரக்கூன் 5.ராட்சத எறும்புத் தின்னி 6. ஸீல்

பரிசு யாருக்கு?

1. பி.கார்த்திகா, பாலாஜி மெட்ரிக் பள்ளி, அம்பத்தூர், சென்னை


2. பே. ஆறுமுகம், தூய மரியன்னை மெட்ரிக் பள்ளி, மதுரை

3. எஸ். வஹிதா, ச.கு. வேலாயுதம் மேல்நிலைப் பள்ளி, குறிஞ்சிப்பாடி

4. ஷா. ஷப்ரீனா, இஸ்லாமிய மாதிரிப் பள்ளி, திருவிதாங்கோடு

5. ஈ. லக்ஷ்மிப்ரியா, சின்னியம்பாளையம், கோவை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.





உலகிலேயே மிகவும் குளிர்ச்சியான அலுவலகங்கள் ஹாங்காங்கில் தான் உள்ளன. 21, 22 டிகிரி செல்சியஸ் குளிரில் தான் அங்கே வேலை செய்கின்றனர். கோடைக் காலத்தில் 60% மின் செலவு ஏ.சி. சாதனங்களால் ஏற்படுகிறது.

விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர்கள் கொடுக்கும் ஆதரவுக் குரல், விளையாட்டு வீரர்களின் திறனை சராசரியாக 1.85% அதிகரிப்பதாக ஸ்காட்லாந்து விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

பீகாரில் பிப்ரவரியில் நடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் எந்தக் கட்சிக்குமே தனித்து ஆட்சி அமைக்கும் வகையில் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே பேரவை முடக்கி வைக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டுள்ளது.



வெளிநாட்டு வேலை!

இந்தியாவிலிருந்து 1998 - 2004 ஆம் ஆண்டு வரை வேலை தேடி 23 லட்சத்து 86 ஆயிரம் பேர் வெளிநாடு சென்றுள்ளனர். இவர்களில் 86% பேர் தமிழகம், கேரளம், ஆந்திர மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இதிலும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தான் அதிகம்.

இந்தியாவில் 10 கோடிப் பேர் தொலைபேசியைப் பயன்படுத்துகின்றனர். இதில் மொபைல் போன் வைத்திருப்பவர்கள் 5.36 கோடிப் பேர்! ஒவ்வொரு மாதமும் 20 லட்சம் பேர் போன் வசதியைப் பெற்று வருகின்றனர்.

மணலில் புதைந்தவர் மீண்டும் எழுந்தார்!


ஆர்.பொன்னம்மாள்

மார்வார் தேசத்திலே 'ஜிதடம்' அழகான ஊர். அங்கே குயவர் இனத்திலே பிறந்தவர் கூபா. ஒரு நாளைக்கு ஒரு பானைதான் அவரால் செய்ய முடியும். முப்பது பானைகள் சேர்ந்ததும் சூளையிடுவார். எளிமையான அந்த வாழ்க்கையிலும் பசி என்று வந்தவர்களுக்கு அன்னதானம் செய்து வாழ்ந்தார்.

திடீரென்று அந்நாட்டு அரசன் வரியை உயர்த்தினான். பணமாகக் கொடுக்க முடியாத குயவர்களிடம் பத்து பானைகள் வசூலித்தனர். இருபது பானைகளைச் சூளையில் அடுக்கினார் கூபா. சூளையைப் பிரித்தால் முப்பது பானைகள் இருந்தன.

இறைவன் கருணையை எண்ணி கூபா தம்பதிகள் மகிழ்ந்தனர். ஒருநாள் பரந்தாமன் இவரைச் சோதிக்க 200 அடியார்களோடு மாறுவேடத்தில் வந்து ''ஐயா! அன்னதானப் பிரபுவே! எங்கள் இத்தனை பேரின் பசிதீர்க்க உங்களால் ஆகுமா?'' என்று கேட்டார்.

''அமருங்கள்; வருகிறேன்'' என்று கூறி கடைவீதிக்குச் சென்றார் கூபா. ஓர் இரக்கமுள்ள மளிகைக் கடைக்காரரிடம் ''ஐயா! இருநூறு பேர் சாப்பிடும்படியான



மளிகை சாமான்களை விரைந்து கொடுங்கள். அதற்கான வேலையை நான் செய்கிறேன்'' என்றார்.

வியாபாரி கூபாவிடம் ''என் நிலத்தில் ஒரு கிணறு தோண்ட வேண்டும். அதுவும் நாளைக்கே வேலை ஆரம்பிக்க வேண்டும். முடியுமா?'' என்று கேட்க, கூபா ஒப்புக் கொண்டார்.

திருப்தியாக சமைத்து உண்டு கூபாவுக்கும் கொடுத்தனர் அடியார்கள்.

மறுநாள் வாக்களித்தபடி கிணறு தோண்ட மண்வெட்டி, கடப்பாரை, கூடை சகிதம் மனைவியோடு வந்தார் கூபா.

இறைவன் அருளால் சூரியன் அஸ்தமிப்பதற்குள் நீர் ஊற்றுகள் பெருக ஆரம்பித்தன. மேலே ஏறிவந்தார் கூபா.

வேலை எவ்வளவு தூரம் நடந்திருக்



கிறதென்று பார்க்க வந்த வியாபாரி அசந்தே போனான். பல பேர் பல நாள் தோண்டியும், நீர் வராமல் திணறும்போது ஒரே நாளில் தண்ணீரா? என வியந்தான்.

அப்போது எவருமே எதிர்பாரா மல் கரை சரிந்தது. கூடியிருந் தவர்கள் அலறியபடி ஓடினர். கூபா மணலுக்குள் புதைந்தார். பலர் கூபாவைத் தேடினர். மேலும் மேலும் மணல் சரிந்ததே தவிர கூபாவின் உடல் கிடைக்க வில்லை.

அவர் மனைவி கதறி அழு தாள். அவர் கனவில் திருமால் தோன்றி "அடுத்த ஆண்டு உன் கணவர் திரும்பக் கிடைப்பார். அழாதே!" என்று தேற்றினார்.

வியாபாரியும் 'அவளுடைய துயரத்துக்கு நாம் காரணமா னோமே' என்று வேதனைப்பட் டான். ஒரு வருடமாயிற்று.

ஒருநாள் பாகவத கோஷ்டி அந்தக் கிணற்றைக் கடக்கும் போது கிணற்றுக்குள்ளிருந்து பஜனை ஒலி கேட்டது. அவர்கள் அதை அரசனிடம் கூறினர்.

அரசனும் பரிவாரங்களோடு வந்து அந்த இன்னிசையைக் கேட்டான். ஆட்களை விட்டுத் தோண்டச் செய்தான். அங்கே ருக்மணி பிராட்டியோடு கண் ணன் கொலுவிருக்க கூபா பஜனை செய்து கொண்டிருப் பதை அவர் மனைவி உட்பட ஊரே பார்த்து வியந்தது.

அரசனும் வணிகனும் கூபாவை வணங்கினர். ஒரு வருடமாக மணலுக்குள் உயி ரோடிருந்த அதிசயத்தை ஊரே பார்த்து பிரமித்தது.

ஸ்ரீகிருஷ்ணன் கூபாவுக்கு மட்டும் கேட்கும்படி "என்ன வரம் வேண்டும்?" என்றார்.

"உன்னை எப்பிறவியிலும் மறவாதிருக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார் கூபா.

"இந்த இடத்தில் உன் தொண்டர்களைக் கொண்டு ஓர் ஆலயம் எழுப்பச் சொல். நான் இங்கு குடியிருப்பேன். இந்த 'ஜிதடம்' என்றும் புகழோடு விளங்கும்" என ஆசீர்வதித்தார் கோபாலன். அதன்படி அந்த இடத்தில் பக்தர்கள் ரங்கனுக்கு ஆலயம் கட்டினர். அதை இன்றும் 'ஜிதடம்' நகரில் காணலாம். ●



உலகின் மிகப் பெரிய நிறுவனங்கள் வரிசையில் இவரது குழு நிறுவனங்களும் தொடர்ந்து இடம்பெற்றன.


GOKULAM
THE Magazine for Children
BIRTHDAY BASH!
NEW
SERIAL!
CONTESTS!
FEATURES!
plus
BHUBANESWAR SPECIAL
HP
BOOK YOUR COPY TODAY
JULY 2005
Rs.8/-only
For Subscriptions mail to :Gokulam, Kalki Buildings,
47- NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 032
E-mail:subscription@kalkiweekly.com

திருடா! திருடா!

ரெ.சண்முக வேலாயுதம்

ராத்திரி நேரம்! சமையல் அறையில்
பாத்திரம் மோதும் பெருஞ்சத்தம்!
மூத்தவர், இளையவர் அலறல் கேட்டு
முழித்துக் கொண்டது தெருவெல்லாம்!

பாட்டி சமையல் அறையின் தாழ்ப்பாள்
போட்டு விட்டாள் வெளிப்பக்கம்!
மாட்டிக் கொண்டான் திருடன் என்று
மகிழ்ந்து போனார் எல்லோரும்!

போனில் சொன்ன செய்தி யறிந்து
போலீஸ் காரர் படையாக!
வேனில் வந்து வீட்டைச் சுற்றி
வளைத்துக் கொண்டு நின்றார்கள்!






''சரண்டர் ஆகா விட்டால் சுடுவேன்!''
சத்தம் போட்ட இன்ஸ்பெக்டர்,
அரண்டு போனார் பானைகள் ஒலியும்
அதிக மாகிப் போனதனால்!....

கால்கள் உதறக் கைகள் நடுங்கக்
கதவைத் திறந்தார் இலேசாக!
பால்சட் டிக்குள் மாட்டிய தலையுடன்
பாய்ந்தது வெளியே ஒரு பூனை!

சட்டிக் குள்ளே விட்ட தலையைச்
சரியாய் எடுக்கத் தெரியாமல்
முட்டி மோதிய பூனையைக் கண்டு
விட்டார் நிம்மதிப பெருமூச்சு!



ஓவியப் போட்டி



தொட்டிகளில் வளர்க்கப்படும் அழகான வண்ண மீன்களைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு : **வண்ண மீன்கள்.** படம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி : 8.7.2005.

கோகுலம் சுழல் கோப்பை!



ஓர் ஆண்டில் கோகுலம் இதழ்களில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இப்பொழுதே முயற்சி செய்தால் உங்கள் பள்ளியும் சுழல் கோப்பையைப் பெற முடியும். இன்னும் ஐந்து மாதங்களே உள்ளன. உடனே நீங்களும் உங்கள் நண்பர்களும் படைப்புகளை அனுப்பி வையுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!

கையிலுள்ள ஐந்து விரல்களுக்கிடையில் ஒரு நாள் சண்டை மூண்டது.

கட்டைவிரல் தான்தான் விரல்களில் பிரதானம் என்றது. இதனால் அல்லவோ ஏகலைவனிடம் குரு காணிக்கையாக கட்டைவிரலை தனக்குத் தரும்படி துரோணர் கேட்டுப் பெற்றார்.

உடனே, ஆள்காட்டி விரல், தான் மற்றவர்களை அடையாளம் காட்டுவதனால் அல்லவா ஒவ்வொருவரையும் நன்கு தெரிந்து கொள்ள முடிகிறது என்றது. எனவே, தனக்கு நிகர் யாருமில்லை என்றது.

பனைமரம் போன்று நெடிதுயர்ந்த நடுவிரல் மற்ற விரல்களை ஏளனமாகப் பார்த்துச் சிரித்தது. உருவத்தில், உடல் வளர்ச்சியில் உயர்ந்தவர்களே உண்மையில் உயர்ந்தவர்கள் என்று, தலை நிமிர்ந்து நின்றது.

மோதிர விரல் தங்கம், நவமணிகள் மற்றும் பிளாட்டினம் போன்றவற்றின் அடிப்படையில், தானே உயர்ந்தவன் என்றது. செல்வச் செருக்கு அவ்விரலின் மதிப்பைக் கூட்டியது. யாருமே தனக்கு ஈடு இணையில்லை என்றது.

சாந்த சிகாமணி சுண்டு விரல் "இறைவன், பெரியோர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் வணக்கம் கூறும் போது சுண்டுவிரல்தான் முன்னிருந்து முகமன் கூறுகின்றது. முதன்மை பெறுகின்றது" என்றது.

உள்ளதை உள்ளபடிச் சொல்லும் உள்ளங்கை மத்யஸ்தம் செய்து வைத்தது. உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனியென வெளிப்படுத்தி விரல்களின் பிரச்னைக்கு நல்லதொரு தீர்ப்பை வழங்கியது.

''யார் பெரியவர், யார் சிறியவர் என்று பார்ப்பதே தேவையில்லாத செயல். எவராக இருப்பினும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் சிறந்தவரே. ஒதுக்கப்பட வேண்டியவர் என்று யாரும் கிடையாது. ஒற்றுமையால் எதையும் சாதிக்கலாம்'' என்றது.

- கோவி.ரிஷ்யச்ருங்,
திருச்செங்கோடு



யார் பெரியவர்?

கதை : ஸ்நேகா

அழகி

படம் : சேகா

சூரியன் நத்தை மரவட்டை மண்புழு சேவல்

 உதிக்கவும்  யும்  யும் சோம்பல் முறித்தபடி நடக்க ஆரம்பித்தன. ''இருங்கள். நானும் வரேன்'' என்றபடி ஒரு  அவசரமாக மண்ணைவிட்டு வெளியே வந்தது. ''அழகிப் போட்டி அறிவிச்சிருக்காங்க பார்த்தியா?'' என்றது . ''அழகுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?'' என்றது .  க்கு கோபம் வந்தது. ''நண்பர்களாக இருக்க, அழகெல்லாம் முக்கியமில்லை. நல்ல மனம் இருந்தால் போதும்'' என்றது . ''உன் முதுகில் அசிங்கமான ஓடு.  க்கு ஆயிரம் கால்கள். என்னைப் பாருங்க வழவழ, பளபளன்னு எவ்வளவு அழகாகவும் மென்மையாகவும் இருக்கேன்!'' என்று கர்வப்பட்டது . அப்போது ஒரு  அருகில் வந்தது. உடனே  தன் கூட்டுக்குள் உடலை மறைத்துக் கொண்டது.  வட்டமாகச் சுருண்டுவிட்டது.  லின் வாயில் அகப்பட்டது அழகான .

விளையாட்டு அரங்கம்

பட்டங்களை வென்றது ஸ்பெயின்!




2005ஆம் ஆண்டுக்கான ஃபிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. இந்த ஆண்டு போட்டியைப் பொறுத்தவரை ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கம்தான் அதிகம். ஆண், பெண் ஒற்றையர் பட்டங்களை ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்களே வென்றிருக்கின்றனர்.

பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் ஃபிரான்ஸ வீராங்கனை மேரி பியர்ஸும் ஸ்பெயின் வீராங்களை ஜஸ்டின் ஹெனினும் மோதினர். பரபரப்பான இறுதி ஆட்டத்தில் 6 - 1, 6 - 1 என்ற நேர் செட்களில் மேரி பியர்ஸை தோற்கடித்தார் ஜஸ்டின் ஹெனின். 23 வயதாகும் ஹெனின் 7 மாத இடைவெளிக்குப் பிறகு வென்ற பெரிய அளவிலான பட்டம் இதுதான்.

இதே போல் ஆண்



• ஃபெடரர்



• ஜஸ்டின் ஹெனின்

கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் அர்ஜென்டினா வீரர் மரியானோ பியூர்டாவும் ஸ்பெயின் வீரர் ரஃபேல் நடாலும் மோதினர். நடால் அரையிறுதி ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரர் ரோஜர் ஃபெடரரை 6 - 3, 4 - 6, 6 - 4, 6 - 3 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடையச் செய்தார்.

இறுதிப் போட்டியில் சிறப்பாக விளையாடி 19வது வயதில் முதல் கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றார் நடால்.

"என்னைப் பொறுத்தவரை ஃபெடரர் தான் சிறந்த வீரர். ஆச்சர்யப்படும்விதமான ஆட்டம் அவருடையாது. அவரை நான் வென்றாலும் அவரே சிறந்த ஆட்டக்காரர்" என்றார் நடால்!

இந்தப் பட்டத்தை வென்றதன் மூலம் நடால் தரவரிசையில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறார்.

இவர்தான் அந்தப் பிரபலம்!



ஜே.ஆர்.டி.டாட்டா.

இவரது தாத்தா ஜெம்ஷெட் டாட்டா. இவர்கள் பெயரில் உருவான தொழில் நகரம்தான் ஜெம்ஷெட்பூர்.

- ஜி.எஸ்.எஸ்.

கிரிக்கெட்

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றிருந்தது பாகிஸ்தான் கிரிக்கெட் அணி. இரண்டு டெஸ்ட் கொண்ட தொடரில் முதல் டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது. இரண்டாவது டெஸ்டில் சதமடித்து லாரா புதிய சாதனை படைத்திருக்கிறார். அதிக சதம் அடித்துள்ளவர்கள் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர், சுனில் கவாஸ்கர் தலா 34 சதங்களுடன் முதல் இடத்தில் இருக்கின்றனர். ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் வாஹ் இரண்டாம் இடத்திலிருக்கிறார். லாரா மூன்றாம் இடத்தைப் பிடித்திருக்கிறார். டான் பிராட்மேன் 29 சதங்களுடன் நான்காவது இடத்திலிருக்கிறார்.

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த நியூஸிலாந்தின் ஜான் ரைட் ஓய்வு பெற்றுவிட்டார். புதிய பயிற்சியாளராக ஆஸ்திரேலியாவின் கிரீக் சாப்பல் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

நிழல் எவ்வளவு நீளம்?

I. பாட்டிக்குக் கிடைத்த தொகை : 5,24,28,800 ரூபாய். பெரிய தொகையைப் பார்த்து பாட்டி திகைக்க மாட்டாரா!

II. கோழி உணவு 10 கிலோ, மாட்டுத் தீவனம் 2 கிலோ, ஆட்டுக்குத் தழை 88 கிலோ.

III. 40 X 5/6 = 200/6 = 33 அடி 4 அங்குலம்

IV. 16 - 16ம் பெற்று பெருவாழ்வு வாழ்க. 1, 1 - 1 பானை சோற் றுக்கு 1 சோறு பதம். 8, 16 - தாய் 8 அடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும். 1, 2 உலக்கைக்கு 1 புறம் இடி, மத்தளத்திற்கு 2 புறத்திலும் இடி. 10 - பசி வந்தால் 10 ம் பறந்து போகும். 1000 - அடக்கம் 1000 பொன் பெறும். 100-நொறுங் கத் தின்றால் 100 வயது. 5,50 - 5ல் வளையாதது 50ல் வளையாது. 6,100 - 6லும் சாவு 100லும் சாவு. 1000, 1000 யானை இருந் தாலும் 1000 பொன், இறந் தாலும் 1000 பொன். 10½ - 10½ மாற்றுத் தங்கம் போல.

V. 123456789 x 9 111111111
123456789 x 18 = 222222222
123456789 x 27 = 333333333
123456789 x 36 = 444444444
123456789 x 45 = 555555555
123456789 x 54 = 666666666
123456789 x 63 = 777777777
123456789 x 72 = 888888888
123456789 x 81 = 999999999

VI. 1. நாசிக் 2. ஹெஞ்லாக் 3. டென்மார்க் 4. கேப்டன்குக்

VII. ராஜா கேட்ட தொகை 8 + 14 + 20 + 26 + 32 = 100



குறுக்கெழுத்துப் புதிர் விடை


1 அ	ம்	ம	ன்	■	■	■	■	2 ப
டி	3 க	■	க	■	ல்	ய	ளை	4 வ
■	ரோ	■	ரு	■	ய	■	■	ள
■	5 து	த்	6 மு	■	7 க	ர்	வ	ம்
■	■	■	■	■	■	■	■	■
8 நா	ர	த	ர்	■	9 வி	ற	10 கு	■
ஞ்	■	■	கா	■	யா	■	ரோ	■
11 சி	வ	ப்	12 பு	■	ச	■	13 த	டை
ல்	■	■	■	■	ர்	ப	ம்	14 க

10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள் : 1.தேனீக்கள் 2.புலியின் வால் 3. அணிலின் வால் 4.கரடியின் காது 5.புலியின் மீசை 6.தேன் குடம் 7.கரடியின் சட்டை 8.மரம் 9.பன்றியின் சட்டை 10.பன்றியின் நிழல்



அதிக விளைச்சல்!

விடுமுறைக்கு மாமா வீட்டுக்கு வந்த நித்யாவுக்கு ஒரே ஆச்சர்யம். போன வருடம் தோட்டம் இத்தனை அழகாக இல்லை. ஆனால் இந்த வருடம் கத்தரி, வெண்டை, தக்காளிச் செடிகளில் செடி கொள்ளாத காய்கள். பாகல், அவரை, கோவைக் கொடிகளில் கொத்துக் கொத்தான காய்கள். பரங்கிக் கொடியில் வெவ்வேறு அளவுகளில் பரங்கிக் காய்கள் காய்த்துக் கிடந்தன.

இது தவிர ரோஜா, செம்பருத்தி, மல்லிகை போன்ற பூக்களும் நிறையப் பூத்துக் குலுங்கி கண்ணையும் மனதையும் கவர்ந்திழுத்துக் கொண்டிருந்தன.

நித்யா மாமாவிடம் சென்று தோட்டத்தின் மாயாஜாலம் பற்றிக் கேட்டாள்.

''மாயாஜாலம் எல்லாம் ஒண்ணுமில்லை நித்யா. கழிவுகளைப் பயன்படுத்தி வீட்டிலேயே தயாரித்த இயற்கை உரங்கள்தான் இந்த அமோக விளைச்சலுக்குக் காரணம்.''

''ரொம்ப ஆச்சர்யமாயிருக்கே! எப்படி இந்த உரத்தைத் தயாரிக்கிறீங்க மாமா?'' என்றாள் நித்யா.

''காய்கறிக் கழிவுகள், வேப்ப இலைகள், ஆடு, மாடு சாணம் போன்றவற்றை ஒரிடத்தில் போட்டு மட்க வைத்து அதையே உரமாகப் பயன்படுத்தினேன். இதனால் விளைச்சலும் அதிகம்; தீமையும் இல்லை'' என்றார் மாமா.

''மாமா, உங்க டெக்னிக்கை நானும் பயன்படுத்தப் போறேன்'' என்றாள் திவ்யா.

மாமாவும் மகிழ்ந்தார்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka